بسم الله الرحمن الرحیم    نحمدہ ونصلی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 49

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

04 ஜமாதில் அவ்வல் 1443 ஹிஜ்ரி கமரி 09 தப்லீக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 9 டிசம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَهُوَ اللّٰهُ فِي السَّمٰوٰتِ وَفِي الْاَرْضِ ؕ يَعْلَمُ سِرَّكُمْ وَجَهْرَكُمْ وَيَعْلَمُ مَا تَكْسِبُوْنَ

வானங்களிலும், பூமியிலுமுள்ள அல்லாஹ் அவனேயாவான். உங்களின் மறைவானவற்றையும், வெளிப்படையானவற்றையும் அவன் அறிகிறான். மேலும் அவன் நீங்கள் சம்பாதிப்பதையும் அறிகிறான். (6:4)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதனுக்குள் ஈமான் உருவாகி விடும்போது செயல்களில் ஓர் இன்பம் உருவாகி விடுகின்றது. அவரது இறைஞானத்தின் கண் திறந்து விடுகின்றது. தொழுகைக்குரிய உரிமைகளை நிறைவேற்றியவாறு தொழுகையை அவர் தொழுகின்றார். பாவங்களின் மீது அவருக்கு ஒரு வெறுப்பு உருவாகி விடுகின்றது. அசுத்தமான சபைகளை அவர் வெறுக்கின்றார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

உங்களது ஈமானை எடை போடுங்கள். செயல் ஈமானின் ஆபரணம் ஆகும். செயல் நிலை சரியாக இல்லையென்றால் உண்மையில் ஈமானும் இல்லை. நம்பிக்கையாளர் அழகானவராக இருக்கின்றார். எவ்வாறு ஓர் அழகானவருக்கு சாதாரண மற்றும் எளிய காப்பை அணியச் செய்தால் அது அவரை மேலும் அழகாக ஆக்கி விடுமோ அதேபோன்று நம்பிக்கை கொண்டவரை (நற்)செயல் இன்னும் அழகானவராக காட்டுகின்றது. தீய செயல் இருக்குமென்றால் பின்னர் எந்தப் பயனும் இல்லை. உண்மையான ஈமான் மனிதனுக்குள் உருவாகி விடுகின்றபோது அவனது செயல்களில் ஓர் இன்பம் உருவாகி விடுகின்றது. அவரது இறைஞானத்தின் கண் திறந்து விடுகின்றது. தொழுகைக்குரிய உரிமைகளை நிறைவேற்றியவாறு தொழுகையை அவர் தொழுகின்றார். பாவங்களின் மீது அவருக்கு ஒரு வெறுப்பு உருவாகி விடுகின்றது. அசுத்தமான சபைகளை அவர் வெறுக்கின்றார். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்காக அவர் தமது உள்ளத்தில் ஓர் துடிப்பையும், உத்வேகத்தையும் பார்க்கின்றார். அந்த ஈமான் அவரை மஸீஹைப் போன்று சிலுவையை சுமப்பதிலிருந்தும் தடுப்பதில்லை. அவர் இறைவனுக்காக, ஆம்! இறைவனுக்காக! இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று நெருப்பிலும் வீழ்வதில் திருப்தி கொள்கின்றார். அவர் தமது விருப்பத்தை இறை விருப்பத்தின் கீழ் வைத்துக் கொள்ளும்போது பின்னர் عَلِيْمٌ بِذَاتِ الصُّدُوْرِ (நெஞ்சங்களில் இருப்பவற்றை நன்கறியும்) அல்லாஹ் அவரது பாதுகாவலனாகவும், கண்காணிப்பாளனாகவும் ஆகி விடுகின்றான். அவர்

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

**அல்லாஹ்வின் புறமிருந்து ஏதாவது வாக்குறுதி வழங்கப்பட்டால் பின்னர் சிறப்பாக துஆவிலும், இறைவணக்கத்திலும் ஈடுபட்டு விட வேண்டும். ஏனென்றால் அப்போது தான் அந்த வாக்குறுதி எல்லா வகையான நன்மையுடனும் முழுமையடையும். அதற்காக மற்ற நாட்களில் இறைவணக்கத்தை கைவிட்டு விட வேண்டும் என்பது அதன் பொருளல்ல. மாறாக, அதன் பொருள் என்னவென்றால் வழக்கத்தை விட அதிகமாக இறைவணக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும்**

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَأْتِيَكَ الْيَقِيْنُ (15:88)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இங்கு யகீன் என்பதன் பொருள் மரணமாகும். அல்லாஹ் கூறுகின்றான்: இனி நீங்கள் மரணம் வரை எமது இறைவணக்கத்தில் ஈடுபட்டிருங்கள். அதாவது இஸ்லாத்திற்கு கிடைக்க இருக்கின்ற முன்னேற்றத்தில் இனி எந்த தடையும் இருக்காது. இனி நீங்கள் மரணம் வரை அல்லாஹ்வின் இறைவணக்கத்தை செய்ய முடியும். இந்த மக்கள் தற்போது இறைவணக்கத்தில் என்ன தடைகளை ஏற்படுத்தி வருகிறார்களோ அதனை இறைவன் இவ்வாறு அழித்து விடுவான். அதாவது உமது முழு வாழ்க்கையும் இறைவணக்கத்தின் சுதந்திரத்தின் அடிப்படையில் அமைதியில் கழியும்.

யகீன் என்பதற்கு பொதுவான பொருளும் இந்த இடத்தில் கொடுக்க முடியும். அந்நிலையில் இதன் பொருள் இவ்வாறாக அமையும். அதாவது எந்த நேரத்திற்கான வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதோ அது வரும் வரை சிறப்பான இறைவணக்கத்தில் மூழ்கி விடுங்கள். ஒரு வகையில் தண்டனை அல்லது அடையாளத்தின் தாக்கங்கள் வெளிப்படுதலின் பெயர் யகீன் என்று வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் வாக்குறுதி முழுமையடையாத வரை அதன் முழுமையான உண்மைத்துவம் வெளிப்படுவதில்லை. எனவே அல்லாஹ்வின் புறமிருந்து வாக்குறுதி வழங்கப்படும்போது குறிப்பாக அல்லாஹ்வின் புறமிருந்து ஏதாவது வாக்குறுதி வழங்கப்பட்டால் பின்னர் சிறப்பாக துஆவிலும், இறைவணக்கத்திலும் ஈடுபட்டு விட வேண்டும். ஏனென்றால் அப்போது தான் அந்த வாக்குறுதி எல்லா வகையான நன்மையுடனும்

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## நபிமொழி

**ஹிஜ்ரே அஸ்வதை முத்தமிடுதல்**

1597: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஹிஜ்ரே அஸ்வதிற்கு அருகில் வந்து அதை முத்தமிட்டுவிட்டு, நீ தீங்கோ, நன்மையோ அளிக்க முடியாத ஒரு கல் தான் என்பதை நான் நன்கறிவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதைக் கண்டிருக்காவிட்டால் உன்னை ஒருபோதும் நான் முத்தமிட்டிருக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் செய்யிது ஜெயினுலாபுதீன் வலியுல்லாஹ் ஷாஹ் (ரலி) இந்த ஹதீஸிற்கு இவ்வாறு விளக்கம் அளிக்கிறார்கள்: இணை வைக்கும் அரபு சமுதாயங்களும், அரபு அல்லாத சமுதாயங்களும் சுயமாக உருவாக்கிக் கொண்ட கற்களுக்கு பூஜை செய்து வந்தார்கள். அதனை நன்மை தீமைக்கு அதிபதியாக கருதி வந்தனர். முஸ்லிம்களில் அறியாத மக்களுக்கு அந்த கல் தொடர்பாக ஏதாவது தவறான புரிதல் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த இணை வைக்கும் சிந்தனையை ரத்து செய்தார்கள். இறைவணக்கத்தில் புகழ்ச்சியும், பணிவும், நம்பிக்கையும் அமைந்திருக்கும். இவற்றில் எந்த ஒன்றிக்கும் ஹிஜ்ரே அஸ்வதை முத்தமிடுதலுடன் அல்லது அதனைத் தொடுவதுடன் ஒருபோதும் எந்த தொடர்பும் இருக்கவில்லை.

(சஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் அல்ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை)*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 05 நவபர் 2021 (முழுவதுமாக)*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் USA அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் காணொலி சந்திப்பு*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் 2013*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும். மேலும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் உயர பறக்க விட வேண்டும் என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்வதற்காக அஹ்மதிகள் இறைவழியில் செலவிடுகின்றனர்**

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றும் கோடீஸ்வரர்களின் ஜமாஅத் அல்ல. அது எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால் அதன் பெரும்பான்மை ஏழை மக்களையும் அல்லது நடுத்தர வர்க்கத்தை சார்ந்த மக்களையும் கொண்டுள்ளது. ஆனால் அவ்வாறிருந்தபோதும் தியாகத்தின் ஓர் உணர்வு உள்ளது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சியில் நமது பங்கும் இருக்க வேண்டும். பின்னர் இந்த சாதாரண தியாகங்களும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு இலட்சம், கோடி பவுண்டுளுக்கு சமமான கனிகளை கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் அவர்கள் இருக்கின்றனர். எனவே அசல் விஷயம் என்பது அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்படுதலாகும்**

**அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் ஜமாஅத்திற்கு 15.3 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விடவும் 8 இலட்சத்து 52 ஆயிரம் பவுண்ட்கள் அதிகமாகும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 நவம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக் மாதம் 05 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களின் சிறப்புப் பண்புகளை எடுத்துக் கூறியுள்ளான். அவற்றில் ஒன்று என்னவென்றால், அவர்கள் தங்களது தூய செல்வத்திலிருலிந்து அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்றனர். அல்லாஹ் திருக்குர்ஆனில் செல்வத்தை செலவழிப்பது தொடர்பாக எங்கு கூறியுள்ளானோ அங்கு செல்வத்தை செலவிடுபவர்கள் நம்பிக்கையாளர்கள் என்றே கூறியுள்ளான். ஓரிடத்தில் தான தர்மங்களின் பக்கம் கவனமூட்டியவாறு தர்மங்கள் தொடர்பாக கூறியுள்ளான். மற்றோர் இடத்தில் ஸகாத்தின் அடிப்படையில் செலவைப் பற்றி அல்லாஹ் கூறியுள்ளான். பின்னர் தியாகம் செய்யக் கூடியவர்கள் தங்களது செல்வத்தை இறைவனின் வழியில் வழங்குகின்றனர் என்றும் அவர்கள் அந்த செல்வத்தை எவ்வாறு செலவிட வேண்டும்? எங்கு செலவிட வேண்டும்? என்றும் கூறியுள்ளான். இறை ஜமாஅத்துகளின் வழிமுறை என்னவென்றால், அவர்கள் தங்களது செல்வத்தை தூய்மைப்படுத்துவதற்காக, அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக மற்றும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக இறைவழியில் செலவிடுகின்றனர்.

நமது ஜமாஅத்திலும் இதேபோன்ற பொருள் தியாகங்களுக்கான தொடர் நிலைபெற்றுள்ளது. இது அல்லாஹ்வின் கட்டளையாகும் என்பதையும், அவர்கள் வழங்குகின்ற அந்த தியாகங்கள் (செல்வங்கள்) பின்னர் அவை எவ்வாறு செலவிடப்படுகின்றன என்பதையும் ஜமாஅத் உறுப்பினர்கள் அறிந்துள்ளனர். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும். மேலும் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் உயர பறக்க விட வேண்டும் என்ற நோக்கத்தையும் எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றியிருந்தார்கள். இந்தப் பணி ஒரு சாதாரண பணி அல்ல. மிகவும் பரந்துபட்ட பணியாகும். உலகில் இந்த தூதுச் செய்தியை பரப்ப வேண்டும்.

எவ்வாறிருப்பினும் அதற்காக செலவீனங்களுக்கான தேவை உள்ளது. மேலும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உறுப்பினர்கள், நீங்கள் உங்களது செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவிடுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையை புரிந்தவாறு அந்த செலவீனங்களை முழுமை செய்வதற்கு முயற்சி செய்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் பரவியுள்ள அஹ்மதிகள் தமது பொருள் தியாகங்களில் எப்படிப்பட்ட முன்னுதாரணங்களை வழங்குகின்றனர் என்றால் அவற்றைக் கண்டு மனிதன் இந்த நம்பிக்கையில் முன்பை விட அதிகமாக நிலைபெற்று விடுகின்றான். அதாவது நிச்சயமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாகவே இறுதி காலத்தில் இஸ்லாத்தின் அழகிய போதனை உலகில் பரப்பட இருக்கின்றது. மேலும் அன்னார் இறைவனால் அனுப்பப்பட்டவர் ஆவார்கள் என்ற நம்பிக்கையில் மனிதன் முன்பை விட அதிகமாக முன்னேறி விடுகின்றான்.

எதிரிகள் இந்த ஓர் அடையாளத்தை மட்டும் சீர்தூக்கிப் பார்த்தால் மேலும் தமது உள்ளங்களிலுள்ள காழ்ப்புணர்ச்சிகளை வெளியேற்றி விட்டு நீதியை கையாண்டால் பின்னர் அஹ்மதிய்யத்தின் உண்மைக்கு இந்த ஓர் அடையாளமே அவர்களின் உள்ளங்களிலுள்ள எதிர்ப்பின் உணர்வுகளை தூய்மையாக்கி விட முடியும். ஆனால் அவர்களின் உள்ளம் கற்களை விட அதிக கடினமாக உள்ளது. குறிப்பாக ஆலிம்களின் உள்ளங்கள். பெயர்தாங்கி ஆலிம்களின் உள்ளங்கள். எவ்வாறிருப்பினும் அவர்களின் விவகாரம் அல்லாஹ்வுடன் உள்ளது.

நான் கூறியதுபோன்று அஹ்மதிகள் தமது செல்வத்தை இறைவனின் வழியில் செலவிடுகின்றனர். அவ்வாறு செலவிடும்போது இந்த எண்ணத்துடன் செலவிடுகின்றனர். அதாவது நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிஷனை முழுமை செய்ய வேண்டும் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் உயர பறக்க விட வேண்டும் என்ற எண்ணத்துடன் செலவிடுகின்றனர். நீங்கள் எதனை செலவிடுகின்றீர்களோ, அல்லாஹ்வின் வழியில் எவ்வளவு செல்வத்தை நீங்கள் வழங்குகின்றீர்களோ அதனை இறைவன் பல மடங்கு அதிகரித்து திருப்பிக் கொடுத்து விடுவான் என்பது நிச்சயமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களுடன் செய்துள்ள வாக்குறுதியாகும். ஆனால் ஏராளமான அஹ்மதிகள் எப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால், நாங்கள் இறைவனின் திருப்தியை பெற வேண்டும். அதுவே எங்களது நோக்கமாகும் என்று அவர்கள் எண்ணுகின்றனர். அதனால் ஒருவேளை உலக நன்மை கிடைக்கின்றதென்றால் அது அல்லாஹ்வின் அருளாகும். தியாகங்களின் மூலமாக அல்லாஹ் நம்மிடம் திருப்தி கொள்ள வேண்டும். மேலும் நமது முடிவை அழகாக்கிக் கொள்வதற்கு உகந்த ஏற்பாடு ஆகி விட வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக உள்ளது.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஒன்றும் கோடீஸ்வரர்களின் ஜமாஅத் அல்ல. அது எப்படிப்பட்ட ஜமாஅத் என்றால் அதன் பெரும்பான்மை ஏழை மக்களையும் அல்லது நடுத்தர வர்க்கத்தை சார்ந்த மக்களையும் கொண்டுள்ளது. ஆனால் அவ்வாறிருந்தபோதும் தியாகத்தின் ஓர் உணர்வு உள்ளது. இஸ்லாத்தின் மறுமலர்ச்சியில் நமது பங்கும் இருக்க வேண்டும். பின்னர் இந்த சாதாரண தியாகங்களும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு இலட்சம், கோடி பவுண்டுளுக்கு சமமான கனிகளை கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் அவர்கள் இருக்கின்றனர். எனவே அசல் விஷயம் என்பது அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்படுதலாகும்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் தனது எல்லைக்குட்பட்ட காரணிகளுடன் எந்தப் பணியை தொடங்கினாலும் அல்லாஹ் அதில் அருள் செய்து விடுகின்றான். எந்த அளவுக்கென்றால் இவர்கள் இந்தப் பணியில் பல மில்லியன் பவுண்ட்களை செலவிடுகின்றனர் என்று பார்ப்பவர்கள் கருதுகின்றனர். ஆனால் இது ஏழை மக்களின் பணமாகும். அவற்றில் இறைவன் புறமிருந்து அருள் செய்யப்படுகின்றது. அதன் விளைவாகவே நமது சிறிய பணிகளும் பெரும் பணிகளாக தென்படுகின்றன என்பது அவர்களுக்கு தெரியாது.

இங்கு நான் இதனையும் கூறி விடுகின்றேன். அதாவது ஜமாஅத் வளரும்போது பல்வேறு வகையான சிந்தனை கொண்டவர்களும், குறைந்த தர்பிய்யத் பெற்றவர்களும் அல்லது பழைய அஹ்மதிகளிலும் தர்பிய்யத்தின் குறைவின் காரணமாக இதுபோன்ற சிந்தனை கொண்டவர்களும் தென்படுகின்றனர். அவர்கள் வீடுகளிலும் பேசி விடுகின்றனர். சிறுவர்களுக்கு முன்பும் பேசுகின்றனர். அதனால் பிள்ளைகளின் மூளைகளிலும் கேள்விகள் எழத் தொடங்கி விடுகின்றன. ஏன்? எதற்காக? நான் சந்தா கொடுக்க வேண்டும்? என்று கேள்வி கேட்கின்றனர்.

எனவே முதலில் தமது நடைமுறைகள் மற்றும் செயல் மூலமாக மக்களின் சந்தேகங்களை அகற்றுவது பொறுப்பாளர்களின் பணியாகும். மக்களிடம் நம்பிக்கையை நிலைநாட்ட வேண்டும். மக்கள் கொடுக்கின்ற சந்தா ஒரு குறிப்பிட்ட செலவீனங்களில் செலவிடப்படுகின்றன. அவை அந்த நோக்கத்திற்காகவே செலவாகின்றன என்பது அவர்களுக்கு தெரிய வேண்டும். இரண்டாவதாக, பொருள் தியாகத்திற்கு என்ன முக்கியத்துவம் உள்ளது? என்பதை அன்புடன் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். இறைவனின் பார்வையில் இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது? அவர்கள் செய்கின்ற பொருள் தியாகத்திற்கு பகரமாக அல்லாஹ்வின் திருப்தி அவர்களுக்கு கிடைக்கின்றது என்பதையும், பின்னர் இந்த பொருள் தியாகங்கள் எங்கே செலவிடப்படுகின்றன என்பதையும் மக்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

இஸ்லாத்தை பரப்புகின்ற பணிகளில் செலவிடப்படுகின்றன. நாம் நடத்துகின்ற டி.வி சேனல் வகைக்காக அதிகமாக செலவிடப்படுகின்றன. புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. திருக்குர்ஆன் வெளியிடப்படுகின்றது. ஏழை பிள்ளைகளின் கல்வி வகைக்கு செலவிடப்படுகின்றன. ஏழைகளுக்கும் மற்றும் பசி, பட்டினியில் இருப்பவர்களுக்கும் உணவு வழங்குவதற்காக செலவிடப்படுகின்றன. முபல்லிக்மார்களின் கல்வி மற்றும் அவர்களின் மூலமாக நடைபெறும் தப்லீக்கில் செலவிடப்படுகின்றன. பள்ளிவாசல்கள் கட்டப்படுகின்றன. இதேபோன்று இன்னும் ஏராளமான ஜமாஅத் செலவீனங்கள் உள்ளன.

துரதிஷ்டவசமாக மக்களில் பெரும்பான்மையானவர்கள் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்கள் என்பதால் நான் இந்த விஷயங்களை எடுத்துரைக்கவில்லை. ஜமாஅத் பரவும்போது அதிகமான வளர்ச்சியின் காரணமாக தீமையை பரப்பக்கூடியவர்களும், ஷய்த்தானிய எண்ணங்களை உருவாக்கக் கூடியவர்களும் வந்து விடுகின்றனர். மேலும் அவர்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். குறைந்த தர்பிய்யத் பெற்ற மக்களின் மூளைகளில் சந்தேகங்களை உருவாக்க முயற்சி செய்கின்றனர். எனவே தான் நான் இந்த விஷயங்களை கூறியுள்ளேன்.

ஜமாஅத்தின் உறுப்பினர்களில் இந்த சிந்தனையுடைய மக்களும் உள்ளனர். அதாவது ஜமாஅத் அமைப்பை நடத்துவதற்கு செலவீனங்களின் அவசியம் உள்ளது என்பதையும், இறைவழியில் செலவிடுங்கள் என்பது அல்லாஹ்வின் கட்டளை என்பதையும் அந்த மக்கள் அறிந்து வைத்துள்ளனர். ஆக ஜமாஅத்தில் இதுபோன்ற எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. அதாவது மக்கள் தங்களிடத்தில் ஒன்றும் இல்லாத நிலையிலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக ஏதாவதொரு வகையில் செல்வத்திற்கு ஏற்பாடு செய்து செலவிடுகின்றனர். பின்னர் அல்லாஹ்வும் அதுபோன்ற தியாகங்களை வீணாக்குவதில்லை. பின்னர் அல்லாஹ் وَيَرْزُقْ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبْ என்ற தனது வாக்குறுதிக்கேற்ப அவர்களுக்கு சிந்தனையே இல்லாத இடத்திலிருந்து அவர்களுக்கான ரிஸ்கை வழங்கி விடுகின்றான். அல்லாஹ்வும் தனது இந்த வாக்குறுதியை முழுமை செய்து விடுகின்றான்.

இதை திருக்குர்ஆனில் மட்டும் படிப்பவர்களாக அஹ்மதிகள் இல்லை. மாறாக, இன்றும் கூட அந்த வாக்குறுதி முழுமையடைவதை அஹ்மதிகள் பார்க்கவும் செய்கின்றனர். மேலும் அது தொடர்பான தமது அனுபவங்களை எழுதவும் செய்கின்றனர். நான் அதற்கான உதாரணங்களையும் எடுத்து வைப்பேன். இது ஒன்றும் பழைய காலத்து விஷயங்கள் அல்ல. அதாவது பழைய காலத்து மக்களின் கதைகளை நாம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதல்ல. மாறாக, அதுபோன்ற அனுபவங்களால் இன்றும் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் ஈமானை உறுதிப்படுத்துகின்றான். நேரடியாக அல்லாஹ்வின் அருளை பெறக்கூடியவர்களுக்கு மட்டும் பயன் கிடைப்பதில்லை. மேலும் அவர்களின் ஈமான் மட்டும் உறுதி பெறுவதில்லை. மாறாக, அவர்களுக்கு அருகில் இருக்கக் கூடியவர்களின் ஈமானும் உறுதியடைகின்றது. அவர்களுக்கும் அதன் காரணமாக பொருள் தியாகத்திற்கான உணர்வு ஏற்படுகின்றது. பின்னர் அவர்களும் தமது பொருள் தியாகங்களில் முன்னேற வேண்டும் என முயற்சி செய்கின்றனர். அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர். நான் உதாரணங்களை எடுத்துரைப்பேன் என்று கூறினேன். எனக்கு தமது தியாகங்களைப் பற்றி மக்கள் கடிதம் எழுதியுள்ளனர். அத்தகைய மக்களின் சில உதாரணங்களை அதாவது அல்லாஹ் எவ்வாறு அவர்களுக்கு அருளினான் என்பதை நான் எடுத்துரைப்பேன்.

கினிகனாகிரியின் ஓர் உதாரணம் உள்ளது. முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகின்றார்கள்: அதாவது தஹ்ரீகே ஜதீத் சந்தா தொடர்பாக ஹுஸூர் கொடுத்த குத்பாவிலிருந்து ஈமானை வலுவூட்டக்கூடிய சில சம்பவங்களை நான் ஜமாஅத்திற்கு படித்துக் காட்டினேன். மேலும் அவர்களும் இந்த முன்னுதாரணங்களை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் அவர்களிடம் கூறினேன். அப்போது மைமூனா சாஹிபா என்ற பெண்மணியின் ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு வந்தது. வீட்டில் செலவுகளுக்கு பணம் இல்லை. எனது கணவர் தனது பணி தொடர்பாக நகரத்திற்கு வெளியே சென்றுள்ளார். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு எனது தந்தை எனக்கு 1 லட்சம் கனி ஃபிரான்க் தொகையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் என்று அவர் கூறினார்.

சந்தா கொடுக்கவா? அல்லது குடும்பத்தின் செலவுகளுக்கு இந்த தொகையை பயன்படுத்திக் கொள்ளவா? என்ற சந்தேகத்தில் நான் இருந்தேன். பின்னர் நான் துஆ செய்து விட்டு பாதி பணத்தை அதாவது 50,000 ஃபரான்க் தொகையை தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் கொடுத்து விட்டேன்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்: இந்த சம்பவம் நிகழ்ந்து 24 மணி நேரம் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள் அல்லாஹ் எனக்கு அற்புதமான முறையில் 3 லட்சம் ஃபிரான்க் தொகையை வழங்கி விட்டான். எனக்கு எந்த இடத்திலிருந்து கிடைக்கும் என்று எண்ணமே இருந்ததில்லையோ அங்கிருந்து இந்த தொகையை வழங்கி விட்டான். அல்லாஹ் சரியான முடிவை எடுப்பதற்கு எனக்கு நற்பேறு வழங்கியுள்ளான் என்று நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினேன். இதன் மூலம் எனது ஈமானும் அதிகரித்துள்ளது என்று அன்னார் கூறுகின்றார்கள்.

கனடாவின் ஒரு மஜ்லிஸின் சதர் சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: தஹ்ரீகே ஜதீத் பட்ஜெட்டை முழுமை செய்யுமாறு செயலர் கூறியபோது, சந்தா கொடுக்காத உறுப்பினர்களின் பாக்கித் தொகையின் விவரம் கேட்கப்பட்டபோது அங்குள்ள நிலவரத்தின் அடிப்படையில் 325 டாலர் என்ற ஒரு சாதாரண தொகையாக இருந்தது தெரிய வந்தது. நான் என் சார்பாகவே அதனை செலுத்தி விடுவேன் என்று நான் எண்ணினேன். ஆனால் நான் வங்கிக் கணக்கை பார்த்தபோது அதில் எந்தப் பணமும் இல்லை. மாறாக, மைனஸில் கணக்கு இருந்தது. 3 டாலர் கூடுதலாக செலவாகி இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: அடுத்த நாள் நான் வங்கிக் கணக்கை பரிசோதித்து பார்த்தபோது எனது ஆச்சரியத்திற்கு எல்லையில்லாமல் போய் விட்டது. அதாவது எனது கணக்கில் 3000 டாலரையும் விட கூடுதலான தொகை இருந்தது. இது எந்தத் தொகை என்றால் அது நீண்ட காலமாக Pending-ல் இருந்தது. அது கிடைப்பதற்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. ஆனால் நான் எஞ்சிய தொகையை செலுத்தி விடுவேன் என்று எண்ணம் கொண்டபோது அல்லாஹ் அது கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான். மேலும் ஒரு நீண்ட காலமாக Pending-ல் இருந்து வந்த தொகை உடனடியாக கிடைத்து விட்டது.

அடுத்து தென் ஆஃப்ரிக்காவிலிருந்து ஷாஹீன் சாஹிப் என்ற ஒரு நண்பர் இவ்வாறு

கூறுகின்றார்: நான் தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களை கொடுத்து விட்டேன். எனது வங்கிக் கணக்கிலிருந்த பாதி தொகையை அந்த வகைக்கு கொடுத்து விட்டேன். இது ஒன்றும் பெரிய தொகையாக இருக்கவில்லை. தஹ்ரீகே ஜதீத் கொடுப்பதற்கு இது கடைசி மாதமாகும். தற்போது சந்தா கொடுக்கவில்லையென்றால் பின்னர் சந்தர்ப்பம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்று தெரியாது என்பது அவரின் பார்வையாக இருந்தது.

ஆக, அவர் கூறுகின்றார்: நான் அந்த சந்தாவை செலுத்தி விட்டேன். அதே நாளன்று அன்னாரின் தந்தையாரும் அன்னாரை சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். அன்னார் சில தொகையை Transfer செய்தார்கள். அது அவருக்கு கிடைத்து விட்டது. தேவைகளும் முழுமையாகி விடும்.

ஷாஹீன் சாஹிப் கூறுகின்றார்: எனது தந்தை கொடுத்திருந்த தொகையானது தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் நான் கொடுத்த தொகையை விட 20 மடங்கு அதிகமாக இருந்தது. எனவே அவர் தனது தந்தையிடமிருந்து கிடைக்கக் கூடிய அந்த தொகையிலிருந்தும் மீண்டும் சந்தா கொடுத்தார்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: எனது வருமானம் அதிகரித்து விட்டது. எனக்கு எங்கிருந்தோ அல்லாஹ் கொடுத்து விட்டான். எங்கிருந்து கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கவில்லையோ அங்கிருந்து கொடுத்து விட்டான். பின்னர் சந்தா கொடுத்தபோது அதே நாள் மாலை அவர் பணிபுரியும் இடத்திலிருந்து முதலாளியின் தொலைபேசி அழைப்பும் வந்தது. அதாவது உங்களுக்கு விருப்பம் இருக்குமென்றால், நாங்கள் துபாயில் உங்களுக்கு ஒரு வேலை வழங்க விரும்புகின்றோம். எவ்வாறிருப்பினும் அவர், ஆம்! என்று கூறி விட்டார். இவ்வாறு வெளிநாட்டில் ஒரு நல்ல வேலை வாய்ப்பிற்கான ஏற்பாடும் ஆகி விட்டது.

அவர் கூறுகின்றார்: இந்த இரண்டு சம்பவங்களும் தற்செயலாக நடந்திருக்கவில்லை. மாறாக, அது சந்தா கொடுத்ததாலும், தியாகம் செய்ததனாலும் கிடைத்த அல்லாஹ்வின் அருளே ஆகும் என்று நான் நம்புகின்றேன்.

அடுத்து ஆஸ்திரேலியாவின் முரப்பி சாஹிப் எழுதுகின்றார்: ஜமாஅத்தின் ஒரு உறுப்பினர் கூறுகின்றார்: அவர் சந்தா கொடுப்பதற்கு வாக்குறுதி வழங்கி இருந்தார். அவரின் பொருளாதார நிலைமை மோசமாக இருந்தது. வாக்குறுதிக்கேற்ப சந்தா கொடுத்தபோது அவருக்கு இந்த நம்பிக்கை இருந்தது. அதாவது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். எனவே இறைவன் எனக்கு 100 மடங்கு அதிகரித்துக் கொடுப்பான் என்று நம்பினார். இவ்வாறும் சிலர் எண்ணம் கொள்கின்றனர். அவர் ஒரு பிளாட்டை வாங்கியிருந்தார். அதனுடைய மதிப்பு அதிகரிப்பதற்கான எந்த சிறப்பான நம்பிக்கையும் இருந்திருக்கவில்லை.

அவர் கூறுகின்றார்: ஆனால் சந்தா கொடுத்த பிறகு அந்த பிளாட்டின் லாபம் 100 மடங்கை விடவும் அதிகரித்து விட்டது. அல்லாஹ் இந்த பொருள் தியாகத்தை ஒப்புக் கொண்டவாறு இந்த அருளை செய்துள்ளான் என்று எனது நம்பிக்கை உறுதியாகி விட்டது.

அடுத்து கஜாகிஸ்தான் முபல்லிக் எழுதுகின்றார்: அங்கு அலி பேக் சாஹிப் என்ற தூய அஹ்மதி ஒருவர் உள்ளார். அவர் 10,000 ஆயிரம் டென்கி தொகையை தஹ்ரீகே ஜதீத் போன்றவற்றில் வழங்கி விட்டார். டென்கி என்பது அந்த நாட்டின் கரன்ஸி ஆகும்.

அவர் கூறுகின்றார்: அதன் பிறகு நான் பணிக்கு சென்று விட்டேன். சில நாட்களுக்குப் பிறகு கம்பெனியின் உயர் அதிகாரி ஒருவர் என்னை அழைத்தார். மேலும் நமது கம்பெனிக்கு இந்த முறை அதிக லாபம் கிடைத்துள்ளது. எனவே முழு கம்பெனியிலும் நல்ல பணி செய்ததற்காக மூன்று நபர்களுக்கு ஒரு லட்சம் போனஸ் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம் என்று கூறினார்.

அவர் கூறுகின்றார்: அல்லாஹ் இந்த சந்தாவின் காரணமாக 10 மடங்கு அதிகமாக எனக்கு வழங்கி விட்டான். அதற்கு எந்த நம்பிக்கையும் இருந்திருக்கவில்லை.

அடுத்து பிரம்மிங்கம் யூ.கே-விலும் ஒரு சகோதரர் உள்ளார். அவர் கூறுகின்றார்: நான் எனது குடும்பத்துடன் 2016 ஆம் ஆண்டு பைஅத் செய்திருந்தேன். பைஅத் செய்வதற்கு முன்னர் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. மிக அதிகமான கடனும் இருந்தது. ஜமாஅத்திற்கு வந்த பிறகு எனது தகுதிக்கேற்ப சந்தாக்களை கொடுக்க நான் துவங்கினேன். இன்னும் கூறப்போனால், சில முறை எனது தகுதிக்கும் அதிகமாக சில திட்டங்களில் பங்கு பெறத் தொடங்கினேன்.

அவர் கூறுகின்றார்: பைஅத்தின் ஆரம்ப நாட்களில் இந்த சம்பவம் நடந்தது. அதாவது எனது மனைவிக்கு ஒரு பள்ளிக்கூடத்தின் நிகழ்ச்சியில் தப்லீக் ஸ்டால் போட வேண்டியதிருந்தது. பிள்ளைகளை கவனித்துக் கொள்வதற்காக எனக்கு எனது வேலையிலிருந்து விடுமுறை எடுக்க நேரிட்டது. இந்த விடுமுறையின் காரணமாக 100 பவுண்ட் பாதிப்பு ஏற்பட இருந்தது. அந்த நேரம் பொருளாதார நிலைமை சிறப்பாக இருக்கவில்லை. எங்களைப் பொறுத்தவரை அது மிகவும் பெரும் தொகையாக இருந்தது.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் பணிக்காக விடுமுறை எடுக்க வேண்டும். தியாகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் விடுமுறை எடுத்துக் கொண்டேன். ஆனால் அல்லாஹ் வேறொன்றை எண்ணி இருந்தான். அதாவது எனது மனைவி தனது பணியை முடித்து விட்டு வீட்டிற்கு வந்தபோது எனது முதலாளியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. முடிந்தால் ஒரு மணி நேரத்திற்காக பணி செய்யும் இடத்திற்கு வந்தடையுங்கள். ஓர் அவசர பணி வந்துள்ளது என்று கூறினார். நான் உடனடியாக புறப்பட்டு விட்டேன். ஒரு மணி நேரம் மட்டுமே அந்த நாள் பணி செய்தேன். நாள் முழுவதற்குமான 100 பவுண்ட் தொகை கிடைத்து விட்டது. வீட்டிற்கு வந்து நான் இதனை எனது மனைவியிடம் கூறினேன். இருவரும் புதிய அஹ்மதிகளாக இருந்தனர். பல நாள் வரை நாங்கள் அல்லாஹ்வின் புறமிருந்து பரிசைப் பெற்று மகிழ்ந்து கொண்டிருந்தோம். மேலும் அல்லாஹ்விற்கு நன்றி கூறிக் கொண்டிருந்தோம்.

வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீத் காதியான் கூறுகின்றார்கள்: இந்தியாவின் கேரளா மாநிலம் கருளாயி ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் இருக்கின்றார். மிகவும் செல்வந்தர் ஆவார். நல்ல வியாபாரி ஆவார். தஹ்ரீகே ஜதீத் சந்தா செலுத்துவதில் அசாதாரண உத்வேகமும் கொண்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் மிகப் பெரும் தொகையை வழங்குகின்றார்.

அவர் கூறுகின்றார்: இந்த ஆண்டு கொரானாவின் சூழலின் காரணமாக பெரும் தொகை கொடுக்கக் கூடிய அளவில் பொருளாதார நிலைமை அமையவில்லை. ஹிஸ்ஸா ஆமத் சந்தா போன்ற இதர சந்தாக்களை செலுத்தி விட்டேன். ஆனால் தஹ்ரீகே ஜதீத் கொடுப்பதற்கு போதுமான பணம் இல்லை. சந்தா கொடுப்பதற்கு எப்போதும் அல்லாஹ்வே நற்பேறு வழங்குகின்றான். ஆனால் தற்போது வெளிப்படையில் எந்தவொரு வாய்ப்பும் தென்படவில்லை. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் நிச்சயம் ஏற்பாடு செய்து விடுவான். நான் கொடுத்து விடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: சந்தா நிதியாண்டு முடிவடைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு பத்து இலட்சம் ரூபாய் என்ற ஒரு பெரும் தொகையை அவர் தஹ்ரீகே ஜதீதில் செலுத்தி விட்டார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஜுமுஆ நாளன்று முரப்பி சாஹிப் குத்பாவின்போது தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதன் பக்கம் கவனமூட்டினார். மேலும் எனது (ஹுஸூர்) குத்பாவிலிருந்து சில பழைய சம்பவங்களை அந்த மக்களுக்கு வாசித்துக் காட்டினார். (அவர்) மிகவும் தாக்கம் அடைந்தார். பத்து இலட்சத்திற்குப் பகரமாக 18 இலட்சம் ரூபாய் சந்தா கொடுத்து விட்டார். அதன் பிறகு அரசாங்க புராஜக்ட் தமக்கு கிடைத்து விடும் என்று நம்புகின்றார். அந்த Project எனக்கு கிடைத்து விட்டால் தஹ்ரீகே ஜதீதில் நான் மேலும் பெரும் தொகையை செலுத்தி விடுவேன் என்றும் அவர் கூறுகின்றார்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளில் பொருள் தியாகத்திற்கான உணர்வைக் கொண்ட செல்வந்தர்களும் உள்ளனர். அவர்கள் பணம் வந்தால் அதை மறைப்பதில்லை. மாறாக, அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதற்கு முயற்சி செய்கின்றனர்.

புர்கினோஃபாஸோவின் முபல்லிக் ஹபீப் சாஹிப் எழுதுகின்றார்கள்: Sore Seydou என்ற நமது ஜமாஅத் உறுப்பினர் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு 1700 ஃபிரான்க் ஷிஃபா பாக்கி இருந்தது. ஆண்டு முடிவடைவதற்கு ஒரு வாரம் மட்டுமே எஞ்சியிருந்தது. எவ்வாறிருப்பினும் அவர் முயற்சி செய்து பாக்கியை விட சற்று கூடுதலாக 2000 ஷிஃபா தொகையை அவர் செலுத்தி விட்டார்.

அவர் கூறுகின்றார்: சந்தா செலுத்தி அப்போது ஒரு மணி நேரம் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள் நண்பர் ஒருவர் பத்தாயிரம் ஃபிரான்க் எனக்கு அனுப்பி விட்டார். பின்னர் ஒரு மணி நேரத்தில் மேலும் பத்தாயிரம் ஃபிரான்க் ஷிஃபா தொகையை அவர் அனுப்பி விட்டார். அத்துடன் மொத்தம் 20000 பிரான்க் ஷிஃபா தொகையை நான் உனக்கு அன்பளிப்பாக

அனுப்பியுள்ளேன் என்று அவர் தொலைபேசியில் அழைத்து கூறினார்.

எனவே சயீதோ சாஹிப் கூறுகின்றார்: அந்த நண்பர் இதற்கு முன் எனக்கு எந்தப் பணமும் அனுப்பி இருக்கவில்லை. இது முதல் முறையாக நடந்துள்ளது.

அவர் கூறுகின்றார்: நான் 2000 ஃபிரான்க் பாக்கி தொகையை செலுத்தி விட்ட பிறகு அல்லாஹ் அதனை அதிகரித்து இரண்டு மணி நேரத்திற்குள் 20000 பிரான்க் ஷிஃபா தொகையை எனக்கு ஏற்பாடு செய்து விட்டான்.

ஆக இவ்வாறு மக்களின் ஈமானும் அதிகரிக்கின்றது.

ஸிராலியோனில் லுங்கி என்ற ஓர் இடம் மட்டும் உள்ளது. அந்த மண்டலத்தின் முஅல்லிம் அப்துல்லாஹ் சாஹிப் எழுதுகின்றார்: முதிய வயதைக் கொண்ட Pa j.M.Kaine சாஹிப் இருக்கின்றார்கள். கடந்த வருடம் அன்னாரின் தஹ்ரீகே ஜதீத் வாக்குறுதி 25000 லியோனாக இருந்தது. இந்த வருடம் அன்னார் 50000 லியோன் என்று தமது வாக்குறுதியை எழுதினார்கள். அன்னார் பொருளாதார ரீதியில் கஷ்டங்களால் சூழப்பட்டிருந்தார்கள். தஹ்ரீகே ஜதீத் செலுத்துவது தொடர்பாக அறிவிக்கப்பட்டபோது எனது வாக்குறுதி எவ்வளவு? என்று அன்னார் உள்ளூர் மிஷனரியிடம் கேட்டார். 50000 லியோன் என்று கூறியபோது அவருக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. இது எப்படி எழுதி விட்டீர்கள்? என்னால் சுயம் இதை செலுத்த முடியாது என்று கூறினார். இதை நீங்கள் தான் சுயமே எழுதினீர்கள் என்று கூறப்பட்டது. எவ்வாறிருப்பினும் மௌனமாகி விட்டார்.

அடுத்த வாரம் கூறுகின்றார்: அன்ஸார் கூட்டம் நடைபெற்றது. என்னிடத்தில் 60000 லியோன் இருந்தது. 20000 லியோனை நான் வீட்டில் விட்டு விட்டு வந்துள்ளேன். மேலும் 40000 லியோனை தஹ்ரீகே ஜதீதில் செலுத்துவதற்காக கொண்டு வந்துள்ளேன். நான் திரும்பிச் செல்வதற்கு என்னிடத்தில் பணம் இல்லை என்று அவர் கூறினார்.

எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: நீங்கள் பொருள் தியாகம் செய்துள்ளீர்கள். அல்லாஹ் தங்களுக்கான ஏற்பாட்டைச் செய்து விடுவான் என்று நான் கூறினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நடந்தே வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஏற்கனவே அறிமுகமான ஒரு நண்பர் கிடைத்து விட்டார். நீண்ட காலத்திற்குப் பிறகு அவருடன் சந்திப்பு நடந்தது. அந்த நண்பருடன் அவர் பேசிக் கொண்டிருந்தார். அந்த நண்பர் செல்லத் தொடங்கியபோது அந்த நேரத்தில் 30000 லியோனை எடுத்து அந்த முதியவருக்கு அன்பளிப்பாக கொடுத்து விட்டார்.

அடுத்து அந்த முதியவர் கூறுகின்றார்: இதன் பிறகு நான் ஒரு பெண்மணியை அறிந்திருந்தேன். அவரது உடல்நலத்தைப் பற்றி விசாரிப்பதற்காக வீட்டிற்கு சென்று விட்டேன். நான் அங்கிருந்து எழுந்து செல்லத் தொடங்கியபோது அவர் 10000 லியோனை கொடுத்து விட்டார். மேலும் இதனை பயண செலவிற்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர் சந்தாவில் கொடுத்த தொகையை அவருக்கு அல்லாஹ் அப்படியே திருப்பிக் கொடுத்து விட்டான். பின்னர் அதிலிருந்து அன்னார் கொடுத்த 50000 வாக்குறுதியையும் நிறைவேற்றி விட்டார்.

பின்னர் கூறுகின்றார்கள்: இதுமட்டுமல்ல. இதன் பிறகு மற்றொரு அருளும் செய்யப்பட்டது. அதாவது ஒரு நெருங்கிய உறவினர் வெளிநாட்டில் வசித்து வந்தார். அவரது தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் கூறினார்: நீண்ட காலமாக உங்களை தொடர்பு கொள்ள முடியவில்லை. நான் தங்களுக்கு அன்பளிப்பாக 4 இலட்சம் லியோன் அனுப்புகின்றேன் என்று கூறினார். அல்லாஹ் அவருக்கு சமமான தொகையை கொடுக்கவில்லை. மாறாக, 10 மடங்கு அதிகமாக அல்லாஹ் அவருக்கு வழங்கி விட்டான். இவ்வாறு அவர் கூறுகின்றார்: எனக்கு பொருள் தியாகம் செய்வதற்கும் நற்பேறு கிடைத்து விட்டது. மேலும் எனது ஈமானும் அதிகரித்து விட்டது.

அடுத்து கினிகனாகரியின் போகே மண்டலம் உள்ளது. அங்குள்ள ஒரு கிராமத்தின் மிஷனரி சாஹிப் இவ்வாறு கூறுகின்றார்: தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களின் வசூல் தொடர்பாக தஹ்ரீகே ஜதீத் வாரம் கொண்டாடப்பட்டது. ஜுமுஆ குத்பாவில் கவனமூட்டப்பட்டது. வீடுகளில் தனிப்பட்ட முறையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. தூய அஹ்மதி நண்பர் ஜிப்ரீல் சாஹிப் உள்ளார். அவர் தொழில் ரீதியாக தச்சர் ஆவார். அவரது வீட்டிற்குச் சென்றோம். சந்தா கொடுக்கும்படி அவருக்கு கவனமூட்டினோம். அப்போது அவர் கூறினார்: நான் இன்றைய செலவிற்காக 20000 ஃபிரான்க் வைத்துள்ளேன். அவை அனைத்தையும் நான் சந்தாவாக செலுத்தி விடுகின்றேன். தற்போது இதைத் தவிர்த்து என்னிடம் வேறு எதுவும் இல்லை. ஆனால் அல்லாஹ் எமது தியாகத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று துஆ செய்கின்றேன்.

ஜிப்ரீல் சாஹிப் கூறுகின்றார்: கடந்த மூன்று மாதமாக அன்னார் ஒரு மரக் கட்டிலை விற்பனைக்காக தயார் செய்து வைத்திருந்தார். ஆனால் எந்த வாடிக்கையாளரும் வரவில்லை. சந்தா கொடுத்த சிறிது நேரத்திலேயே ஒரு நபர் அந்த கட்டிலை வாங்குவதற்கு வந்து விட்டார். அவர் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ஃபிரான்க் கொடுத்து அதை வாங்கிக் கொண்டார். அப்போது ஜிப்ரீல் சாஹிப் உடனடியாக நமது மிஷனரி சாஹிபை தொலைபேசியில் அழைத்தார். அதாவது அல்லாஹ் நமது தியாகத்தை மட்டும் ஒப்புக் கொண்டு விடவில்லை. மாறாக, அவன் பல மடங்கு அதிகரித்து திருப்பிக் கொடுத்து விட்டான் என்று கூறினார். இந்த விஷயத்தை அவர் தமது நண்பர்களுக்கும் கூறுகின்றார். அவர்களின் ஈமானும் உறுதியாக வேண்டும் என்பதற்காக கூறி வருகின்றார்.

முனீர் ஹுஸைன் சாஹிப் ஸிராலியோனில் முபல்லிக்காக உள்ளார். கூறுகின்றார்: சூஃபி சூன்கோ சாஹிப் என்ற இளைஞர் கல்வி கற்று வருகின்றார். மாணவர் ஆவார். கல்வி பயில்வதற்காக பள்ளிவாசலில் தங்கியுள்ளார்.

பொருள் தியாகம் செய்பவர்கள் தொடர்பாக நான் கொடுத்த குத்பாவை அவர் கேட்டார். ஒளிப்பதிவை கேட்டிருப்பார் அல்லது கடந்த வருட தஹ்ரீகே ஜதீத் குத்பாவை கேட்டிருப்பார்.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுகின்றார்: நான் மிக கவனத்துடன் முழு குத்பாவையும் கேட்டேன். நானும் பொருள் தியாகத்தில் பங்கு பெற வேண்டுமே என்ற உணர்வும், உத்வேகமும் என்னுள் அதிகமாக ஏற்பட்டது. ஆனால் கஷ்டம் என்னவென்றால், நான் மாணவனாக உள்ளேன். நான் எந்த வேலையும் செய்யவில்லை. படிப்பு செலவு கூட கஷ்டத்துடன் தான் முழுமையடைகிறது. ஆயினும் இந்த அனைத்து கஷ்டங்களுக்கு மத்தியிலும் என்னுள் மிகவும் நிம்மதியின்மை உருவானது. நான் தஹ்ரீகே ஜதீத் செயலரிடம் எனது வாக்குறுதியாக 5 இலட்சம் லியோனை எழுதிக் கொடுத்தேன். அது எனக்கு மிகவும் கடினமான தொகையாக இருந்தது. அதன் பிறகு அதை செலுத்துவதற்காக சற்று நான் கவலையடைந்தேன். இரவும், பகலும் துஆக்கள் செய்ய தொடங்கி விட்டேன். அல்லாஹ் ஏதாவது ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதன் மூலம் நான் எனது வாக்குறுதியை முழுமை செய்ய வேண்டும் என்று துஆ செய்தேன்.

எனவே சில நாட்களுக்குப் பிறகு எனது ஓர் உறவினர் தனது ஒரு மகனை அழைத்துக் கொண்டு வந்தார். அவர் தனது மகனை பள்ளிக்கூடத்தில் சேர்க்க இருந்தார். நான் பள்ளிக்கூடத்தின் முதல்வரிடம் பேசியபோது அவர் அந்தப் பிள்ளையை பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொண்டார். அந்தப் பிள்ளையின் தந்தை எனக்கு 1 இலட்சம் லியோன் கொடுத்தார். இது உங்களின் உணவிற்கு பயன்படும். இதை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அந்த நாளன்று என்னிடத்தில் உண்பதற்கு கூட எதுவும் இல்லாமல் இருந்தது. ஆனால் நான் இந்த முழு தொகையையும் செலுத்தி விட்டேன். அதாவது கொடுத்த வாக்குறுதியை சிறிது பங்காவது முழுமையாக வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தேன்.

சில நாட்கள் கழிந்த பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: நான் அறியாத எண்ணிலிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஒரு பணி உள்ளது. அதற்கு நல்ல ஊதியமும் கொடுப்போம். நீங்கள் தயாராக உள்ளீர்களா? என்று கேட்கப்பட்டது. நான் உடனடியாக சரி என்று கூறி விட்டேன். அல்லாஹ்வின் அருளால் அந்தப் பணியின் ஊதியமாக எனக்கு ஒரு மில்லியன் லியோன் கிடைத்து விட்டது. அதன் மூலம் நான் எனது தஹ்ரீகே ஜதீத் வாக்குறுதியை உடனடியாக முழுமை செய்து விட்டேன்.

கேபோன் முபல்லிக் இன்சார்ஜ் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஈஸா தின்தானே சாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். பைஅத் செய்வதற்கு முன்பும், தொடர்ந்து சந்தா செலுத்துவதற்கும் முன்பும் எனது நிலைமை எப்படி இருந்தது என்றால் சில நேரம் இரண்டு வாரம் அல்லது மூன்று வாரங்கள் கூட கழிந்திருக்கும்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஆனால் பணி எதுவும் கிடைத்திருக்காது. ஆனால் நான் முறையாக தொடர்ந்து சந்தா கொடுக்க தொடங்கியதிலிருந்து தற்போது ஏறக்குறைய தினமும் வேலை கிடைத்து விடுகின்றது. இவர் மிக தொலைவிலிருந்து வந்து முறையாக சந்தா கொடுக்கின்றார். இன்னும் கூறப்போனால் அவர் எவ்வளவு சந்தா கொடுக்கின்றாரோ அதே அளவு தொகையை டாக்ஸி வாடகைக்கு கொடுக்கின்றார். இரண்டு செலவீனங்கள் செய்வதற்கு பகரமாக வீட்டிலிருந்தே சந்தா கொடுத்து விடுவதற்கு தற்போது அவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உர்தன் நாட்டிலிருந்து ஃபஜர் அதாயா சாஹிபா என்ற ஒரு பெண்மணி கூறுகின்றார்: அஹ்மதிய்யத்தில் நுழைந்து எனக்கு 22 ஆண்டுகள் ஆகி விட்டன. நான் அஹ்மதி ஆனதிலிருந்து இதனை கண்டு வந்துள்ளேன். அதாவது நான் சந்தா கொடுப்பதற்கு நிய்யத் வைக்கும்போது அல்லாஹ் மறைவான முறையில் உதவி செய்து பணத்திற்கான ஏற்பாட்டைச் செய்து விடுகின்றான். சில முறை நான் சந்தா கொடுப்பதற்கு எவ்வளவு தொகையை நிய்யத் வைப்பேனோ அதே அளவிலான பணம் எனக்கு வந்து விடும். இது ஜமாஅத்தின் பரக்கத் ஆகும்.

அவர் கூறுகின்றார்: நான் Engineering முடித்துள்ளேன். வீட்டிலேயே சில பணிகள் எதுவும் கிடைத்து விட்டால் செய்து கொள்கின்றேன். சந்தா கொடுப்பதற்காக நான் எனது கணவரிடம் பணம் வாங்குவதில்லை. இது எனது பழக்கம் ஆகும். ஏனென்றால் பெரும்பாலும் எனது கணவருக்கு பொருளாதார கஷ்டம் இருக்கின்றது. எனவே எனது சொந்த வருமானத்திலிருந்து நான் சந்தா கொடுக்கின்றேன். நான் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுத்து விட்டேன் என்று இந்த வருடம் நான் எண்ணியிருந்தேன். ஆனால் உண்மையில் நான் மறந்து விட்டேன். எனக்கு நினைவூட்டப்பட்டபோது என்னிடத்தில் ஒரு தினார் கூட இருந்திருக்கவில்லை. நான் இதே கவலையில் அதாவது சந்தா எப்படி செலுத்துவது? என்ற கவலையில் இருந்தேன். ஆனால் எனக்கு டியூஷன் கற்றுக் கொடுங்கள் என்று என்னிடம் ஒரு மாணவி வந்தார். அல்லாஹ்வின் அருளால் டியூஷன் ஃபீஸ் மூலமாக சந்தாவும் செலுத்தி விடுவேன். சிறிதளவு பணமும் எஞ்சி விடும்.

புர்கினோஃபாஸோவில் Bokubadala என்ற ஒரு ஜமாஅத் உள்ளது. அங்குள்ள சத்ர் ஜமாஅத் இவ்வாறு கூறுகின்றார்: என்னிடத்தில் ஜமாஅத்தைச் சாராத சில நண்பர்கள் வந்தனர். நாங்கள் உங்கள் மக்களுடைய வயல்களைப் பார்த்து ஆச்சரியம் கொள்கின்றோம். ஏனென்றால் நீங்கள் ஜமாஅத்தின் சார்பாக கட்டப்படும் பள்ளிக்கூடத்திற்கு அதிக நேரத்தை கொடுக்கின்றீர்கள். உங்களின் வயல்களை பார்த்துக் கொள்வதற்கும் பின்னால் யாரும் இல்லை. ஆனால் நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் உங்களுடைய வயல்களின் விளைச்சல் எங்களைக் காட்டிலும் மிக நல்லதாக உள்ளது என்று கூறினர். இதற்கு நேர் மாற்றமாக நாங்கள் எங்களது முழு நேரத்தையும் விளை நிலத்திலேயே செலவிட்டோம். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் உங்களுக்கு எவ்வளவு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதோ அந்த அளவிற்கு விளைச்சல் எங்களுக்கு கிடைக்கவில்லை.

அப்போது சத்ர் சாஹிப் அவர்களிடம் கூறினார்: நாங்கள் இந்த வகாரே அமலை அல்லாஹ் மற்றும் அவனது ஜமாஅத்திற்காக செய்தோம். நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு செலவிட்டு வந்த அதே நேரத்தில் அல்லாஹ்வே! நீயே எங்களது வயல்களை பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் உன் மீதே நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று துஆ செய்து வந்தோம். எனவே அல்லாஹ்வும் எங்களது துஆக்களை ஒப்புக் கொண்டான். மேலும் எங்களது விளை நிலங்களை சிறந்ததாக்கி விட்டான். மேலும் தற்போது நாங்கள் அதற்கேற்ப சந்தாவும் கொடுத்து விட்டோம்.

சிறு பிள்ளைகளும் எவ்வாறு பொருள் தியாகத்திற்கான அறிவு பெற்றுள்ளார்கள் என்று பாருங்கள்! ஏழை நாடுகளைச் சார்ந்த பிள்ளைகளாக இருக்கின்றனர். மேலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலுள்ள கல்வி அறிவு பெற்ற பிள்ளைகளுக்கு கூட சில நேரம் இந்த புரிதல் இருப்பதில்லை. சம்பவம் இவ்வாறாகும். ஸன்ஜபார் பகுதியின் முபல்லிக் ஹுஸைன் யூசுஃப் சாஹிப் கூறுகின்றார்கள்: பிள்ளைகள் பள்ளிவாசலுக்கு வெளியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு முதியவர் அங்கு கடந்து சென்றார். அந்த முதியவர் மகிழ்ச்சியுற்று பிள்ளைகளுக்கு சாக்லேட் வாங்குவதற்காக 1400 ஷிலிங் கொடுத்தார். பிள்ளைகள் பணத்தை பெற்றுக் கொண்டு ஓர் அஹ்மதி கடைக்காரரிடம் சென்றார்கள். அந்த பைசாக்களை நாணயமாக மாற்றி கொண்டு வந்தார்கள். மேலும் தத்தமது பங்கிலிருந்து சாக்லேட் வாங்குவதற்கு பகரமாக அதனை சில்லறையாக மாற்றிக் கொண்டார்கள். அனைத்து பிள்ளைகளும் அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு பள்ளிவாசலுக்கு வந்தனர். அனைவரும் தத்தமது பங்கிலிருந்து ஒவ்வொரு ஷிலின்ங் சந்தாவை செலுத்தி விட்டனர். மிக மகிழ்ச்சியுடன் தத்தமது ரசீதுகளை தாமே வைத்துக் கொண்டனர். அந்த அஹ்மதி கடைக்காரருக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. அதாவது பிள்ளைகள் சந்தா கொடுப்பதற்காக சில்லரைகளை மாற்றிச் சென்றனர் என்று அவருக்கு தெரிய வந்தபோது அவர் மிகவும் ஆச்சரியமடைந்தனார். இதே பிள்ளைகள் தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுதி வாய்ந்த அடித்தளமாக மாறி விடுவார்கள்.

அடுத்து பிள்ளைகளின் தியாகத்திற்கான ஒரு விநோதமான காட்சி உள்ளது. இதுவும் தன்ஸானிய்யாவில் நிகழ்ந்த சம்பவமாகும். இது தொடர்பாக Samuye முஅல்லிம் இவ்வாறு எழுதுகின்றார். நான்காம் வகுப்பில் படிக்கின்ற மூன்று சிறுவர்கள் ஜமாஅத்தில் உள்ளனர். தொடர்ந்து பள்ளிவாசலில் தஃலீம் மற்றும் தர்பிய்யத் வகுப்புகளில் பங்கு பெற்று வருகின்றனர். மூன்று பிள்ளைகளின் குடும்பமும் பொருளாதார ரீதியில் ஏழைகள் ஆவர். யாருக்கும் நிரந்தரமான வருமானத்திற்கு வழி இருக்கவில்லை. கடந்த மாதம் முதல் இவர்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதன் பக்கம் அவர்களுக்குள் போட்டி இருந்து வந்தது. ஒவ்வொருவரும் தனித்தனியாக தமது சந்தாவை செலுத்தி வந்தார். தன்னிடத்தில் எவ்வளவு பணம் உள்ளதோ அதை கொடுத்து விட வேண்டும் என்று எண்ணி வந்தனர். இவ்வாறு அவர்களில் ஒருவர் 500, மற்றொருவர் 400, மற்றொருவர் 200 ஷிலின்ங் என்று அவர்களிடம் இருந்ததை கொடுத்து விட்டனர்.

ஒரு முறை நான் அவர்களிடம் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக நீங்கள் கொண்டு வரும் இந்த பணத்தை எங்கிருந்து கொண்டு வருகின்றீர்கள்? என்று கேட்டேன். அப்போது ஒரு சிறுவர் கூறினார்: நான் எனது தாயாருடன் காட்டிற்கு சென்று விறகு வெட்டுவதற்கு உதவி செய்து வந்தேன். அப்போது கை செலவுக்காக எனக்கு கிடைத்து வந்த பணத்திலிருந்து தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக சேமித்துக் கொண்டேன் என்று கூறினார்.

மேலும் கூறுகின்றார்: நான் சந்தா கொடுக்க துவங்கியதிலிருந்து எப்போதும் விறகுகளை வாங்குவதற்கான வாடிக்கையாளர் உடனடியாக கிடைத்து விடுகிறார். ஒருபோதும் நஷ்டம் ஏற்படவில்லை.

நானும் எனது கை செலவிலிருந்து சந்தா தொகையை தனியாக எடுத்து வைத்து விடுவேன் என்று மற்றொரு சிறுவர் கூறினார்.

மற்றொரு பிள்ளை இவ்வாறு கூறினார்: அவரது வீட்டிற்கு அருகில் உள்ள மரங்களில் கனிகள் போன்றவை கிடைக்கின்றன. அவ்வப்போது தான் உண்ட பிறகு எஞ்சிய கனிகளை விற்று வந்தார். அதிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையிலிருந்து சந்தா கொடுத்து விட்டார். இந்த மூன்று சிறுவர்களும் சந்தாவின் பரக்கத்களையும் கூறியுள்ளனர். சந்தா செலுத்திய பிறகு அவர்களது வாழ்க்கையில் எவ்வாறு அமைதியை உணர்கின்றனர்? என்றும் கூறியுள்ளனர். அல்லாஹ் இந்த பிள்ளைகளின் ஈமானையும், கலப்படமற்ற தன்மையையும் அதிகரித்துக் கொண்டே செல்வானாக. இதுவே ஈமான் ஆகும். இதிலிருந்து நமது பிள்ளைகளும் கூட இன்பத்தை சுவைக்கின்றனர்.

பெலீஸ்: உலகத்தின் முற்றிலும் மற்றொரு மூலையில் உள்ள ஒரு சிறுவனின் உதாரணம். மற்றொரு மூலை. ஆனால் உதாரணங்களைப் பாருங்கள். உதாரணங்கள் அனைத்தும் ஒன்றுபோல் உள்ளன. முபல்லிக் இன்சார்ஜ் பெலீஸ் எழுதுகின்றார்கள்: பெலீஸில் 14 வயது சிறுவர் ஒருவர் பள்ளிவாசல் கட்டுமானப் பணியின் போது தனது சேமிப்பு அனைத்தையும் பள்ளிவாசலுக்காக கொடுத்து விட்டார். அவர் தஹ்ரீகே ஜதீதிலும் தியாகத்தின் ஓர் உயர்தரமான


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

முன்னுதாரணத்தை நிலைநாட்டியுள்ளார். சிறுவன் மிகவும் ஏழை ஆவான். மிகவும் ஏழ்மையான குடும்பத்துடன் அவனுக்கு தொடர்பு உள்ளது. மிகவும் கஷ்டப்பட்டு தான் அவரது தந்தையார் குடும்ப செலவுகளை முழுமை செய்கின்றார்.

கூறுகின்றார்கள்: முரப்பி சாஹிப் தஹ்ரீகே ஜதீதின் முக்கியத்துவம் தொடர்பாக கூறியபோது அந்த சிறுவர் ஒரு டாலர் கொடுத்தார். மேலும் இது எங்களது குடும்பத்தினர் சார்பாக ஆகும் என்று கூறினார். முரப்பி சாஹிப் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஏனென்றால் அவர்களின் பொருளாதார நிலைமையைப் பொறுத்தவரை இவ்வளவு பொருள் தியாகமும் கூட மிகப் பெரிய விஷயமாக இருந்தது. ஆனால் அந்த சிறு வயது பிள்ளை கூறினார்: எனது பெயரை இதில் எழுத வேண்டாம். இதை நான் எனது குடும்பத்தினர் சார்பாக கொடுத்துள்ளேன். நான் எனது பங்கை பிறகு கொடுப்பேன் என்று கூறி விட்டார். எனவே அடுத்த நாள் அந்த சிறுவன் மேலும் பத்து டாலர் கொடுத்து விட்டார். அல்லாஹ் எனது குடும்பத்தினர் மீது நிச்சயம் அருள் செய்வான் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று அவர் கூறினார். அத்துடன் தன் சார்பாகவும் சந்தா செலுத்தி விட்டார்.

அல்லாஹ் எவ்வாறு புதிதாக இணையக்கூடியவர்களின் உள்ளத்தில் பொருள் தியாகத்திற்கான உணர்வை உருவாக்குகின்றான். பின்னர் எவ்வாறு அவர்களுக்கு அருளுகின்றான் என்று பாருங்கள். இது தொடர்பாக மராகஸ் நாட்டின் நூருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்: 2017 ஆம் ஆண்டில் பைஅத் செய்த பிறகு பொருள் தியாகத்தில் பங்கு பெறத் தொடங்கினேன். அப்போது எனது வருமானம் முற்றிலும் சாதாரணமானதாக இருந்தது.

ஒரு நாள் ஜமாஅத் Website–ல் எனது குத்பாவை அவர் கேட்டார். அதில் நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சஹாபிகள் மற்றும் ஏனைய அஹ்மதிகளின் பொருள் தியாகங்களை எடுத்துரைத்திருந்தேன். எனவே அவர் கூறுகின்றார்: இதனால் எனது உள்ளத்தில் ஓர் உத்வேகம் தோன்றியது. மேலும் சில நாட்களுக்குப் பிறகு மராகஸ் ஜமாஅத் தலைவரிடம் வஸிய்யத் அமைப்பில் நான் இணைய விரும்புகின்றேன் என்று நான் கூறினேன். அன்னார் சில நிபந்தனைகளையும், கடமைகளையும் கூறினார்கள். அதன் மூலம் எனது உத்வேகம் மேலும் அதிகரித்தது. நான் வஸிய்யத் செய்து விட்டேன். பின்னர் சில மாதங்களுக்குப் பிறகு எனது நிலைமை நல்லதாகி விட்டது. எனக்கு ஒரு கம்பெனியில் நல்ல வருமானத்தில் வேலை கிடைத்து விட்டது. தற்போது நான் அதே கம்பெனியில் மற்றொரு நகரத்தில் மேலாளராக பணி செய்து வருகின்றேன். எனது வருமானம் மூன்று வருடத்தில் மட்டும் மூன்று மடங்காக அதிகரித்து விட்டது. என் மீது கம்பெனிக்கு எந்த அளவிற்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது என்றால் நான் மராகஸின் தலைநகரத்திலிருந்து வேறொரு நகரத்திற்கு செல்லத் தொடங்கியபோது என்னிடம் மேலாளர் இவ்வாறு கூறினார். உங்களைப் போன்று பணி செய்யக்கூடிய வேறொரு அஹ்மதி இருந்தால் அவர் பணி செய்ய விரும்பினால் எனக்கு சொல்லுங்கள் என்று கூறினார். இதைக்கேட்டு நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டேன். கண்களில் கண்ணீர் வந்து விட்டது. நான் எனது நகரத்தின் ஓர் அஹ்மதி நண்பரிடம் பேசினேன். அவருக்கு அந்த வேலை கிடைத்து விட்டது. அவரும் தற்போது மேலாளராக ஆக்கப்பட்டு விட்டார்.

ஆக அவர் கூறுகின்றார்: சந்தா கொடுத்ததன் காரணமாக எனது குடும்பத்தினர் என் மீது அழுத்தம் போடுகின்றனர். சில உறவினர்கள் சார்பாக நான் ஏளனத்தையும் சந்தித்து வருகின்றேன். எனினும் நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன். சந்தா கொடுத்ததன் காரணமாக ஒருபோதும் பொருளாதார கஷ்டத்தை நான் சந்திக்கவில்லை.

ஆஸ்திரேலியாவின் முரப்பி சாஹிப் பெர்த்திலிருந்து எழுதுகின்றார்: ஓர் இளைஞர் உள்ளார். அவர் இன்னும் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுக்காமல் இருந்தார். சந்தா கொடுக்கும்படி கவனமூட்டப்பட்டது. அப்போது கோவிட் காரணமாக வேலை கிடைக்கவில்லை. பொருளாதார கஷ்டம் உள்ளது என்று அவர் கூறினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவர் என்னை சந்தித்தார். அப்போது எனது வீட்டிலிருந்த சில பொருட்களை சந்தா கொடுப்பதற்காக நான் விற்று விட்டேன் என்று கூறினார்.

தொடர்ந்து கூறுகின்றார்: நான் அவ்வாறு செய்து சில நாட்களே கழிந்திருந்தன. எனக்கு பணியின் அடிப்படையில் நான்கு புதிய Contract–கள் கிடைத்து விட்டன. அத்துடன் எனக்கு ஒரு புதிய வேலையும் கிடைத்து விட்டது. அவை அனைத்தும் All Expenses Paid Job ஆக இருந்தது. அதன் வருமானமும் முன்பை விட மிக அதிகமாக இருந்தது. இது அல்லாஹ்வின் அருளாகும். நான் எனது வீட்டின் பொருட்களை விற்று சந்தா செலுத்தி இருந்தேன். எனவே அல்லாஹ்வும் உடனடியாக அதனை திருப்பிக் கொடுத்து விட்டான் என்பதை நான் கண்டு கொண்டேன்.

அடுத்து தெற்கு ஆஸ்திரேலியாவின் மற்றொரு நகரத்தின் தஹ்ரீகே ஜதீத் செயலர் கூறுகின்றார்: ஒரு தூய நண்பருக்கு தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் பாக்கி இருந்தது. அவருக்கு கவனமூட்டப்பட்டபோது, நான் எனது வீட்டை விற்பதற்கு முயன்று வருகின்றேன். வீடு விற்கப்பட்ட உடனேயே சந்தா செலுத்தி விடுவேன் என்று அவர் கூறினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு தொலைபேசி அழைப்பு வந்தது. அல்லாஹ்வின் அருளால் நான் எதிர்பாராத வகையில் எனது வீடு அதிக லாபத்தில் விற்பனையாகி விட்டது. சந்தா செலுத்துவதற்காக தான் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக அவ்வாறு நடந்துள்ளதாக அவர் நம்புகின்றார். எனவே அவர் தனது வாக்குறுதியிலிருந்து 6 மடங்கு அதிகமாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவை உயர்த்தி விட்டார். அல்லாஹ் உலக லாபங்களை அருளும்போது அதிலிருந்தும் ஓர் அஹ்மதிக்கு இவ்வாறு கவனம் ஏற்படுகின்றது. அதாவது எனது எந்தவொரு திறமையின் காரணமாகவும் இது நடைபெறவில்லை. மாறாக, இது தியாகத்தின் விளைவாகும் என்று எண்ணுகிறார். இது ஓர் அஹ்மதியின் சிந்தனையாகும். வேறு எவருக்கும் இந்த சிந்தனை வர முடியாது.

அர்ஜென்டினாவின் முபல்லிக் எழுதுகின்றார்: நான் பொருள் தியாகத்தின் பக்கம் கவனமூட்டுவதற்காக ஒரு கட்டுரை எழுதினேன். அதில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பாவின் இந்த சொற்களை எழுதினேன்.

பொருள் தியாகம் செய்வது அவசியமாகும் என்று புதிய அஹ்மதிகளுக்கு கூறப்பட வேண்டும். உங்களிடம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி வந்தடைந்துள்ளது. இது தஹ்ரீகே ஜதீதின் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களின் காரணமாக வந்தடைந்துள்ளது என்றும் அவர்களுக்கு கூறுங்கள். எனவே நானும் இதில் பங்கு பெறுகின்றேன் என்ற அடிப்படையில் சந்தா கொடுக்க வேண்டும். அதன் மூலம் நீங்கள் உங்களது வாழ்க்கையை அழகுபடுத்திக் கொள்பவர்களாக ஆகி விட வேண்டும். மேலும் இந்த தூதுச் செய்தியை அடுத்து முன்னால் கொண்டு செல்லக்கூடியவராக ஆகி விட வேண்டும். இதற்காக நீங்கள் அதில் பங்கு பெறுங்கள்.

அவர் எனது இந்த மேற்கோளை எனது குத்பாவிலிருந்து எடுத்துக் கொண்டார். மேலும் அதனை வெளியிட்டார்.

அவர் கூறுகின்றார்: இந்த கட்டுரை ஜமாஅத் நபர்களுக்கு அனுப்பப்பட்டது. அப்போது Anas Ezequiel என்ற ஓர் இளைஞர் என்னைத் தொடர்பு கொண்டார். தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதற்காக நான் மிஷன் ஹவுஸிற்கு வர விரும்புகின்றேன் என்று கூறினார். கடுமையான வெப்பம் இருந்தபோதிலும் பள்ளிக்கூடம் முடிந்த பிறகு அரசுப் பேருந்தில் ஒரு மணி நேரம் பயணம் செய்து மிஷன் ஹவுஸ் வந்தடைந்தார். ஓராயிரம் அர்ஜென்டைன் பைசூவை தஹ்ரீகே ஜதீத் சந்தாவாக கொடுத்து விட்டார்.

அவர் கூறுகின்றார்: எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஏனென்றால் அவரின் பொருளாதார நிலைமை சிறந்ததாக இருக்கவில்லை. மேலும் தற்போது அவர் பள்ளிக்கூடத்தில் மாணவராக இருக்கின்றார். அவரது வருமானத்திற்கென்று சிறப்பான எந்த வழிமுறையும் இருக்கவில்லை. குடும்பத்தின் நிலைமையும் அவ்வளவு சிறப்பானதாக இருக்கவில்லை.

அவர் கூறுகின்றார்: பணத் தட்டுப்பாட்டின் காரணமாக அந்த நாள் அவர் மதிய உணவு உண்ணவில்லை. கேட்டபோது அவர் கூறினார்: புதிய அஹ்மதிகளும் தஹ்ரீகே ஜதீதின் இந்த காரணத்தால் இணைய வேண்டும். ஏனென்றால் தஹ்ரீகே ஜதீத் மூலமாகவே அவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி அவர்களிடம்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

வந்தடைந்துள்ளது என்ற காலத்தின் கலீஃபாவின் இந்த மேற்கோள் எனது உள்ளத்தில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியது.

அவர் கூறுகின்றார்: ஒரு பக்கம் நான் இந்த சொற்களை படித்தேன். மற்றொரு பக்கம் அதே நாளில் திருக்குர்ஆனின் இந்த வசனத்தை நான் வாசித்தேன். அதில் அல்லாஹ் கூறுகின்றான்: ஷஹீதுகள் மற்றும் அவர்களின் தியாகங்களை மரணித்ததாக கருதாதீர்கள். மாறாக, அவர்கள் எப்போதும் உயிருடன் உள்ளனர்.

நானும் அதுபோன்ற தியாகம் செய்ய வேண்டும். அதாவது எனது மரணத்திற்குப் பிறகும் அதன் நன்மைகளும், விளைவுகளும் உயிருடன் இருக்க வேண்டும் என்ற ஆசை எனது உள்ளத்தில் உருவானது என்று அவர் கூறினார்.

அவர் கூறுகின்றார்: எனது குடும்பத்தினர் முஸ்லிம் அல்லாதோர் ஆவர். எனது பிறந்த நாள் சந்தர்ப்பத்தில் அன்பளிப்பாக சிறிது தொகையை வழங்கினர். அந்த தொகையிலிருந்து எஞ்சிய தொகை அனைத்தையும் நான் தஹ்ரீகே ஜதீதில் கொடுத்து விட்டேன். ஏனென்றால் எனக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி வந்தடைந்தது போன்று இந்த தொகையிலிருந்து மற்றவர்களுக்கும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைய வேண்டும். அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு மக்களிடத்தில் உருவாகும் புரட்சிகரமான நிலை என்பது இதுவே ஆகும்.

புதிய அஹ்மதியாக இருக்கட்டும் அல்லது பழைய அஹ்மதியாக இருக்கட்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் எவ்வாறு பணத்தை செலவிடுகிறது? எங்கே செலவிடுகிறது? என்பதை கேட்கும்போது அவருக்கு ஒரு சிறப்பான தாக்கம் ஏற்படுகின்றது. எந்த ஜமாஅத்துகளில் இதன் பக்கம் கவனம் குறைவாக உள்ளதோ (அங்கு பொறுப்பாளர்களாகிய) அவர்கள் இதன் பக்கம் கவனமூட்டினால், நோக்கங்களையும், முக்கியத்துவத்தையும் அவர்களுக்கு எடுத்துரைத்தால் பின்னர் அவர்களின் சந்தாக்கள் அதிகரித்து விடும்.

எவ்வாறிருப்பினும் லைபீரியாவின் ஒரு சம்பவம் உள்ளது. உள்ளூர் முஅல்லிம் முர்தஸா சாஹிப் இருக்கின்றார்கள். அன்னார் புதிய அஹ்மதிகள் அதிகமாக உள்ள ஒரு ஜமாஅத்தில் உள்ளார்கள். கிறிஸ்துவத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக நான் ஒரு ஜமாஅத்திற்கு சுற்றுப்பயணம் சென்றிருந்தேன்.

அன்னார் கிராமத்தை சென்றடைந்தபோது மதிய நேரமாக இருந்தது. பெரும்பாலான மக்கள் வெளியில் தமது வயல்களில் பணி செய்வதற்காக சென்றிருந்தார்கள்.

இன்று இரவு நான் இங்கேயே தங்கி இருப்பேன். உங்களில் 100 சதவீதம் மக்கள் இந்த அருளுக்குரிய திட்டத்தில் இணைந்திடாத வரை நான் இங்கிருந்து திரும்பிச் செல்ல மாட்டேன் என்று அவர் அங்கிருந்த மக்களிடம் கூறினார்.

இரவில் அனைத்து மக்களும் கிராமத்திற்கு திரும்பி வந்தபோது அன்னார் முழு ஜமாஅத்திற்கு முன்பாகவும் தஹ்ரீகே ஜதீதின் மாபெரும் திட்டத்தின் பின்னணி மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அனைவரும் அதில் பங்குபெறும்படி கூறினார்கள். அல்லாஹ்வின் அருளால் அனைத்து ஜமாஅத் சகோதரர்களும், பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு அதில் பங்கு பெற்றனர். அடுத்த நாள் காலை அன்னார் திரும்பிச் செல்ல ஆயத்தமானபோது ஒருவர் கூறினார்: அல்ஃபோன்ஸோ சாஹிப் என்ற ஒரு நண்பர் உள்ளார். அவர் இரண்டு மாதமாக வெளியில் வயல்களிலேயே தங்கி வருகின்றார். அவர் தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறவில்லை என்றும் கூறினார். ஆனால் அவரிடத்தில் உங்களால் சென்றடைய முடியாது. ஏனென்றால் ஒன்று அன்னாரின் நிலம் மிகத் தொலைவில் உள்ளது. இரண்டாவதாக, மழையின் காரணமாக வழிப்பாதை மூடப்பட்டுள்ளது.

அதற்கு, தங்கள் ஜமாஅத்தின் 100 சதவிகித மக்கள் இந்த அருளுக்குரிய திட்டத்தில் இணைய வேண்டும் என்பதற்காக நான் அவரிடமும் சென்றடைவேன் என்று முஅல்லிம் சாஹிப் கூறினார்.

ஜமாஅத் உறுப்பினர்கள் தடுப்பதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால் அவர் உறுதியாக இருந்தார். எவ்வாறிருப்பினும் சில நண்பர்கள் அவருடன் இணைந்து கொண்டனர். 2:30 மணி நேரம் நடை பயணத்திற்குப் பிறகு அவர்கள் அல்ஃபோன்ஸோ சாஹிபை சென்றடைந்தனர். அதனால் அவருக்கு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் ஏற்பட்டது. உடனடியாக அவர் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை கொடுத்து விட்டார்.

அல்ஃபோன்ஸோ சாஹிபின் மனைவியும், பிள்ளைகளும் அவருடனேயே தங்கி இருந்தார்கள். அப்போது மனைவி அஹ்மதியாக இருக்கவில்லை. ஆனால் இந்த அனைத்து காட்சியையும் கண்டு விட்டு அன்னாரின் மனைவி இவ்வாறு கூறினார்: மார்க்கத் தொண்டில் அஹ்மதிகளுக்கு காணப்படும் உணர்வைப் பார்த்து நான் மிகுந்த தாக்கம் அடைந்துள்ளேன். எனவே இன்று நானும் ஜமாஅத்தில் இணைகின்றேன். மேலும் எனது பிள்ளைகளும் ஜமாஅத்தின் அங்கமாக இருப்பார்கள் என்று கூறினார்.

இவ்வாறு இதன் அருளால் ஒரு குடும்பத்திற்கு ஜமாஅத்தில் இணைவதற்கு நற்பேறு கிடைத்து விட்டது.

பொருள் தியாகம் எந்த அளவிற்கு அவசியம் என்ற புரிதல் பைஅத்திற்குப் பிறகு எவ்வாறு மக்களுக்கு ஏற்படுகின்றது என்பது தொடர்பாக மாலி நாட்டிலிருந்து ஒரு முபல்லிக் எழுதுகின்றார்: ஒரு மண்டலத்தில் ஸைடோ சாஹிப் என்ற ஒருவர் இருக்கின்றார். ஒரு நாள் அஹ்மதிய்யா மிஷன் ஹவுஸ் கீதாவிற்கு வருகை தந்தார். தஹ்ரீகே ஜதீத் நிதியாண்டு முடிவடைய இருந்தது. இறைவன் எனக்கு நற்பேறு வழங்க வேண்டும். நான் அதன் மூலம் தஹ்ரீகே ஜதீதில் செய்த வாக்குறுதியை நான் நிறைவேற்றி விட வேண்டும் என்று நான் மிகவும் கவலையுடன் இருந்தேன். இன்று எனக்கு அல்லாஹ் நற்பேறு வழங்கி விட்டான் என்று கூறியவாறு தனது தஹ்ரீகே ஜதீத் சந்தாவை வந்து செலுத்தி விட்டார். அவரது ஒரு கால் ஊனமாக இருந்தது. நீங்கள் ஏன் கஷ்டப்பட்டீர்கள்? நீங்கள் கூறியிருந்தால் நாங்கள் உங்களிடம் வந்திருப்போம் என்று அவரிடம் கூறப்பட்டபோது அவர் மிகவும் உத்வேகத்துடன் இவ்வாறு கூறினார். நான் இமாம் மஹ்தியை ஏற்றுக் கொண்டுள்ளேன். நான் வெளிப்படையான பௌதீக பலவீனங்களுக்கு மத்தியிலும் என்னை நான் ஆரோக்கியமான மக்களை விட சிறந்தவனாகவே கருதுகின்றேன். அல்லாஹ்வின் அருளால் நான் மார்க்கத்தைப் பற்றி கவலை கொண்டுள்ளேன். அதுபோன்ற நிலையில் மார்க்கத்தின் மேன்மைக்காக நான் இங்கு வரை நடந்து வந்தது இறைவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். மேலும் அது எனது பாவமன்னிப்பிற்கு காரணியாக ஆகி விட வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்துள்ளேன் என்று கூறினார்.

பெனின் நாட்டிலிருந்து முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: Moutowama என்ற ஒரு உள்ளூர் முஅல்லிம் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: அவர் தமது மண்டலத்தின் ஒரு புதிய அஹ்மதி ஜமாஅத்தில் சுற்றுப்பயணத்திற்கு சென்றிருந்தார். அங்குள்ள ஜமாஅத்தின் தலைவர் இஸ்மாயீல் சாஹிப் கூறினார்: நாங்கள் துவக்கம் முதலே முஸ்லிம்களாக உள்ளோம். எப்போதும் ஒவ்வொரு வருடமும் ஏதாவது பொருள் தியாகம் அல்லது அல்லாஹ்வின் வழியில் என்ற பெயரில் எங்களது இமாமிற்கு கொடுத்து வந்தோம். நாங்கள் அஹ்மதியாகி இது முதலாம் ஆண்டாகும். முதன் முறையாக நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பொருள் தியாகம் செய்கின்றோம். இதற்கு முன்பு இமாமிடம் நாங்கள் என்னவெல்லாம் கொடுத்து வந்தோமோ அதனை அவரே செலவழித்து வந்தார். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முபல்லிக்கிடம் பொருள் தியாகத்தில் வழங்கப்படும் தொகையின் செலவுகள் பற்றி நாங்கள் கேட்டபோது அன்னார் மிக மகத்துவமிக்க செலவீனங்களை எங்களுக்கு எடுத்துரைத்தார்கள். அதற்கு முன்பு நாங்கள் அதனை அறிந்திருக்கவில்லை. ஜமாஅத் சாதாரண இந்த தொகையை கூட வீணாக்குவதில்லை. மாறாக, கொடுக்கப்பட்ட இந்த சாதாரண தொகையையும் முழு உலகிலும் நடைபெறும் சிறிய, பெரிய எல்லா வகையான முன்னேற்றப் பணிகளிலும், இஸ்லாத்தை பரப்புவதிலும் ஜமாஅத் செலவிடுகின்றது.

மேலும் சில ஃபிரான்க் பணத்தை சந்தாவாக கொடுக்கின்ற ஒரு நபர் அதன் சிறந்த நற்கூலியை பெறுகின்றார். எனவே தியாகத்தின் இந்த தத்துவத்தை புரிந்து நாங்கள் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை கொடுத்துள்ளோம். இந்த வருடம் எங்களது வீடுகளில் பொருளாதார கஷ்டங்கள் ஏற்படவில்லை என்பதையும், எங்களது பிள்ளைகளின் உடல்நலத்திற்காக நாங்கள் தினமும் செலவிட்டு வந்த செலவுகள் இந்த வருடம் ஏற்படவில்லை என்பதையும் நாங்கள் உணர்கின்றோம். தொழுகைகளில் முன்பை விட அதிமாக கலந்து கொள்கின்றோம். அல்லாஹ் எங்களை பாதுகாத்துள்ளான். அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் பொருள் தியாகம் செய்த பிறகு எங்களுக்கு அமைதியும், மன நிறைவும் ஏற்பட்டுள்ளது. எங்களது பொருள் தியாகங்கள் வீண் போகவில்லை.

ஆஃப்ரிக்காவில் வசிக்கக்கூடிய கல்வி அறிவு இல்லாத அந்த மக்கள் சிந்திப்பதில்லை என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால் அந்த மக்கள் எவ்வளவு உயர்தரமான எண்ணங்களை கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால்

அந்த எண்ணங்கள் கல்வி அறிவு பெற்ற மக்களின் மூளைகளில் கூட வருவதில்லை. அன்னார் கூறியவற்றிலிருந்து பொருள் தியாகத்தின் முக்கியத்துவம் வெளிப்பட்டு விடுகின்றது. பைஅத்திற்குப் பிறகு மக்களிடம் ஏற்படும் புரட்சி என்பது இதுவே ஆகும். அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் இஸ்லாத்தை பரப்புவதற்காக தியாகத்திற்கான நற்பேறு வழங்கியுள்ளான். நமது தூய வருமானத்திலிருந்து பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் இந்த தியாகங்கள் ஒப்புக் கொள்ளப்படவும் வேண்டும். அல்லாஹ் நம் மீது திருப்தி கொள்ள வேண்டும்.

தற்போது நான் தஹ்ரீகே ஜதீதிற்கான புதிய ஆண்டிற்கான அறிவிப்பையும் செய்கின்றேன். சில புள்ளி விவரங்களையும் எடுத்து வைப்பேன். அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதின் 87 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியுடன் நிறைவடைந்து விட்டது. தற்போது 88 வது ஆண்டு ஆரம்பமாகி உள்ளது. அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதின் பொருளாதார அமைப்பில் ஜமாஅத்திற்கு 15.3 மில்லியன் பவுண்ட் பொருள் தியாகம் செய்வதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விடவும் 8 இலட்சத்து 52 ஆயிரம் பவுண்ட்கள் அதிகமாகும்.

உலகம் முழுவதுமான ஜமாஅத்துகளில் ஜெர்மனி மிகவும் முன்னேறி உள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார நிலைமைகளும் மோசமாக உள்ளன. தியாகங்களில் அவர்கள் முன்னேறியே இருக்கின்றனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். இதுமட்டுமின்றி இன்றைய நாட்களில் அவர்கள் பொதுவாகவே கஷ்டங்களால் சூழப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு நாளும் ஏதாவது வழக்கு தொடரப்படுகின்றது. ஒருவருக்கெதிராக ஏதாவது வழக்கு தொடுக்கப்படுகின்றது. சட்டத்தின் மூலம் அவர்களுக்கு எந்த அளவிற்கு அழுத்தம் தர முடியுமோ, தொல்லை கொடுக்க முடியுமோ அதற்கு முயற்சி செய்கின்றனர். அல்லாஹ் அவர்களின் கவலைகளை அகற்றுவானாக. அவர்களும் சுதந்திரமாக தமது செயல்பாடுகளை நிறைவேற்ற அருள் செய்வானாக. இஜ்திமாக்களும் நடைபெற வேண்டும். ஜல்ஸாவும் நடைபெற வேண்டும். மேலும் வெளிப்படையாக தியாகங்களை வெளிப்படுத்தவும் வேண்டும். அவர்கள் தமது தியாகங்களை வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால் நம்மால் அதனை வெளிப்படுத்த முடியும். நிர்பந்தத்தின் காரணமாக அவர்களின் சில தியாகங்களை இங்கு குறிப்பிட முடியவில்லை.

எவ்வாறிருப்பினும் இதுமட்டுமின்றி தியாகம் செய்தவர்களில் ஜெர்மனி முதலிடத்தில் உள்ளது என்று நான் கூறியுள்ளேன். அதன் பிறகு பிரித்தானியா உள்ளது. மூன்றாம் இடத்தில் அமெரிக்கா உள்ளது. நான்காவது இடத்தில் கனடா உள்ளது. ஐந்தாவது இடத்தில் மத்திய கிழக்கு நாட்டின் ஒரு ஜமாஅத் உள்ளது. ஆறாவது இடத்தில் இந்தியா உள்ளது. ஏழாம் இடத்தில் ஆஸ்திரேலியாவும், எட்டாவது இடத்தில் இந்தோநேஷியாவும், ஒன்பதாவது இடத்தில் கானாவும், பின்னர் அடுத்த இடத்தில் மத்திய கிழக்கு நாட்டின் ஒரு ஜமாஅத்தும் உள்ளது.

ஆஃப்ரிக்கன் நாடுகளில் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதலிடத்தில் கானா உள்ளது. பின்னர் முறையே நைஜீரியா, புர்கினோஃபாஸோ, தன்ஸானியா ஸிராலியோன் ஜமாஅத்துகள் உள்ளன.

ஏற்கனவே கூறியதுபோன்று ஸிரோலியோன் ஜமாஅத் இன்னும் சிறப்பாக செயல்பட முடியும். போதுமான வாய்ப்பு உள்ளது. ஆனால் எந்த அளவிற்கு கவனம் செலுத்த வேண்டுமோ அந்த அளவிற்கு அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. சரியாக மக்களுக்கு எடுத்துக் கூறினால் பின்னர் மக்கள் பொருள் தியாகம் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றனர். நான் இதனை சம்பவங்களிலும் எடுத்துக் கூறியுள்ளேன்.

அடுத்து கேம்பியா, பெனின், உகாண்டா, கென்யா மற்றும் லைபீரியா போன்ற ஜமாஅத்துகள் உள்ளன.

கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் நைஜீரியா முதலிடத்தில் உள்ளது. பின்னர் கேம்பியா, செனிகால், கானா, தன்ஸானியா, கினிகனாகரி, மலாவி, உகாண்டா, கினிபஸாவ், கோன்கோ கன்ஷாஸா, புர்கினோஃபாஸோ, கோன்கோ பராஸாவீல் போன்ற ஜமாஅத்துகள் உள்ளன.

ஆப்ரிக்காவை தவிர்த்து கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏனைய நாடுகள் உள்ளன. அவற்றில் பெரிய ஜமாஅத்துகளில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதில் ஜெர்மனி முதலிடத்திலும், பின்னர் பிரித்தானியா, ஹாலந்து, பங்களாதேஷ், மொரிஷியஸ் போன்ற ஜமாஅத்துகள் உள்ளன.

முதல் பதிவேட்டை அல்லாஹ்வின் அருளால் அனைவரும் தொடர்கின்றனர்.

ஜெர்மனியின் முதல் பத்து ஜமாஅத்துகள். Rodermark, Neuss, Mehdi-Abad, Koln, Rodgau, Nidda, Florsheim, Pinneberg, Frankenthal மற்றும் Osnabruck ஆகும்.

முதல் பத்து உள்ளூர் அமாரத்துகள். Humburg, Frankfurt, Gross-Gerau, Dietzenbach, Wiesbaden, Morfelden, Riedstadt, Mannheim, Darmstadt மற்றும் Russelsheim ஆகும்.

பாகிஸ்தானில் தஹ்ரீகே ஜதீத் தியாகத்தில் நடைபெற்ற வசூலின் அடிப்படையில் லாஹூர் முதலிடத்திலும், பின்னர் முறையே ரப்வா, கராச்சி போன்ற ஜமாஅத்துகள் உள்ளன.

மாவட்டங்களில் முறையே இஸ்லாமாபாத், குஜ்ரான்வாலா, ஸியால்கோட், உமர்கோட், முல்தான், டோபா டீக்சன்ங், மீர்பூர்காஸ், அடக், மீர்பூர் காஷ்மீர், டேராக காஸி கான் ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.

வசூலின் அடிப்படையில் அதிக பொருள் தியாகம் செய்யக்கூடிய அமாரத்துகள். டிஃபன்ஸ் லாஹூர், குல்ஷன் இக்பால் கராச்சி, அஸீஸ் ஆபாத் கராச்சி, டவுண்ஷிப் லாஹூர், மாடல் டவுண் லாஹூர், முகல்பூரா லாஹூர், தில்லி கேட் லாஹூர், கிலிஃப்டன் கராச்சி, பஹாவல் நகர் கராச்சி மற்றும் ஹாஃபிஸாபாத் நகரம் ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.

பிரித்தானியாவின் முதல் ஐந்து மண்டலங்கள். அவற்றில் மஸ்ஜித் பைத்துல் ஃபுதூஹ், மஸ்ஜித் ஃபஸல் மண்டலம், பின்னர் இஸ்லாமாபாத் மண்டலம், Midlands மண்டலம், பைத்துல் இஹ்ஸான் மண்டலம்.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரித்தானியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள். Farnham, Islamabad, South Cheam, Masjid Fazal, Worcester Park, Birmingham, South Walsall, Aldershot, Gillingha மற்றும் Tilford.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் அமெரிக்காவின் ஜமாஅத்துகள் இவ்வாறாகும். Maryland, Los Angeles, Detroit, Silicon Valley, Chicago, Seattle, Central Virginia, Oshkosh, Atlanta, Georgia, South Virginia, Houstan, York மற்றும் Bostom.

வசூலின் அடிப்படையில் கனடாவின் உள்ளூர் அமாரத்துகள். vaughan, Peace Village, Calgary, Vancouver, Toronto West மற்றும் Toronto.

இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள். முதலிடத்தில் காதியான் உள்ளது. அடுத்து முறையே கோயம்புத்தூர், ஹைதரபாத், கருளாயி, பத்தபிரியம், கொல்கத்தா, பெங்களூரு, கேரன்ங், கோழிக்கோடு, மேலப்பாளையம்.

தியாகத்தின் அடிப்படையில் மாநிலங்களின் நிலைகள். இவற்றில் கேரளா முதலிடத்தில் உள்ளது. பின்னர் முறையே தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப், பெங்கால், தில்லி மற்றும் லட்சத்தீவு ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.

ஆஸ்திரேலியாவின் முதல் பத்து ஜமாஅத்துகள். Melbourne Long Warren, Castle Hill, Marsden Park, Melbourne Berwick, Adelide South, Penrith, ACT Canberra, Paramatta மற்றும் Adelaide West.

அல்லாஹ் தியாகம் செய்யக்கூடிய அனைவரின் செல்வத்திலும், வாழ்நாளிலும் அருள் செய்வானாக.

(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 26 நவம்பர் 2021 – தமிழில் – மவ்லவி அ. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

**லஜ்னா உறுப்பினர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அறிவுரை**

லஜ்னாவின் அனைத்து உறுப்பினர்களும் நல்ல பெண்மணிகளாக திகழ தினமும் ஐவேளை தொழுகைகளை தொழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் பிள்ளைகளை பராமரிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் முன்னுதாரணமான முஸ்லிம் பெண்மணிகளாக இருக்க வேண்டும்.

லஜ்னா இமாயில்லாஹ் கானாவின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை ஜனவரி 24, 2021 அன்று காணொலி மூலம் சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். இந்த சந்திப்பின்போது ஹுஸூர் அவர்கள் இந்த அறிவுரையை வழங்கினார்கள்.

(நன்றி: அல்ஃபஸல் பத்திரிகை இன்டர்நேஷனல் 2 பிப்ரவரி 2021)

## மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா USA வின் ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் காணொலி சந்திப்பு

மார்ச் 28, 2021 ஞாயிற்றுக்கிழமையன்று USA வின் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவிற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் காணொலி சந்திப்பு நிகழ்த்துவதற்கு நற்பேறு கிடைத்தது. இந்த சந்திப்பு மேரிலேண்டிலுள்ள மஸ்ஜித் பைத்துர் ரஹ்மானில் நிகழ்ந்தது. இந்த சந்திப்பில் மேரிலேண்ட், நியூஜர்ஸி, நியூயார்க், நார்த் டெலிஃபோர்னியா, பென்ஸிலோனியா மற்றும் வெர்ஜனியா ஆகிய இடங்களிலிருந்து 60 திஃபில்கள் கலந்து கொண்டிருந்தனர். அன்பிற்குரிய ஆனுஷ் அஹ்மது திருக்குர்ஆன் ஓதினார். அன்பிற்குரிய அல்அமீன் அதன் மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார். அதன் பிறகு உள்ளூர் மஜ்லிஸைச் சார்ந்த அன்பிற்குரிய அய்கான் மலிக் நபிமொழியை வாசித்துக் காட்டினார். அதன் மொழியாக்கத்தை அன்பிற்குரிய ஹம்ஸா கமர் கூறினார். பின்னர் அன்பிற்குரிய காஸிம் மலிக் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகளிலிருந்து சில வரிகளை அழகிய குரலில் படித்தார். அதனை அன்பிற்குரிய காம்ரான் அஸ்கர் அவர்கள் மொழியாக்கம் செய்தார். அதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து கேள்வி கேட்பதற்கான வாய்ப்பை திஃபில் (சிறுவர்)களுக்கு வழங்கினார்கள். ஏராளமான திஃபில்கள் சுமார் 45 நிமிடம் வரை பல்வேறு தலைப்புகளைப் பற்றி கேள்விகள் கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விரிவான பதில்களை வழங்கினார்கள்.

10 வயதுடைய அன்பிற்குரிய அல்அமீன் அத்வேஸி என்பவர் பால்டிமோர் என்ற மஜ்லிஸை சார்ந்தவர் ஆவார். அவர் கூறுகின்றார்: நான் திருக்குர்ஆனின் வசனங்களின் மொழியாக்கத்தை படிப்பதற்கு நின்றபோது நீங்கள் கானாவிலிருந்து வந்துள்ளீர்களா? என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் இல்லை என்று பதிலளித்தேன். பின்னர் நான் நைஜீரியாவின் கானோ என்ற பகுதியிலிருந்து வந்துள்ளேன் என்று கூறினேன். அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் அன்பு நிறைந்த தொனியில் எனது பெயரின் உச்சரிப்பை பற்றி கேட்டார்கள். அந்த நொடிப்பொழுது எனக்கு ஒரு பெரும் சிறப்பான தருணமாக இருந்தது. நான் திரும்பிச் சென்று எனது குடும்பத்தினரிடம் இதன் விளக்கத்தை கூறும்போது அவர்களும் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நான் அறிவேன்.

மேரிலேண்ட் மஜ்லிஸைச் சார்ந்த 13 வயது திஃபில் அன்பிற்குரிய காஸிம் மலிக் சாஹிப் எழுதுகின்றார்: எனது தாயார் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்காக எழுதியிருந்த இந்த கவிதை வரிகளின் சில வரிகளை படிப்பதற்கு அனுமதி தரும்படி நான் சிறப்பான விண்ணப்பத்தை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் செய்திருந்தேன். அப்போது சத்ர் சாஹிப் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்களின் அனுமதி இருக்குமென்றால் படித்துக் கொள்ளலாம் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். நான் சத்ர் சாஹிப் அவர்களை பார்த்தேன். அன்னார் அனுமதி வழங்கி விட்டார்கள். நான் சிறிது பதற்றமடைந்தேன். ஆனால் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் எனது அன்பை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தேன். நான் ஒரு நல்ல கவிஞராவேன் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அந்த கவிதையை கேட்ட பிறகு கூறினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த விஷயத்தை கேட்டு நான் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைந்தேன் என்றால் அதனை சொற்களில் எடுத்துரைப்பது கடினமாகும். இதுவொரு மறக்க முடியாத தருணமாக இருந்தது. அதனை நான் எப்போதும் நினைவில் வைப்பேன்.

ஒரு திஃப்ல் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் தனது ஆமீன் நிகழ்ச்சியை நடத்தும்படி விண்ணப்பித்தார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து இவ்வாறு கூறினார்கள்: இந்த தொற்றுநோய் முடிந்து விடும்போது பின்னர் நானே உங்களுக்கு ஆமீன் நிகழ்ச்சியை நடத்துவேன். ஒருவேளை உங்களது வயது அதிகமாகி விட்டது என்று தஃலீமுல் குர்ஆன் துறையினர் கூறினாலும் நான் உங்களது ஆமீன் நிகழ்ச்சியை எனது வீட்டில் நடத்துவேன். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து அந்த சிறுவனை சூரா இக்லாஸை ஓதும்படி அப்போதே கூறினார்கள். அனைத்து திஃப்ல்களும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிழலின் கீழ் பரிவு நிறைந்த சூழலில் நேரத்தை கழித்தார்கள். அந்த நினைவுகூறத்தக்க தருணங்கள் மிகவும் அழகு வாய்ந்ததாகும். கிலாஃபத்தின் அருட்கொடைக்கு நாங்கள் அல்லாஹ்விற்கு மிகவும் நன்றி கூறுகின்றோம். அந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இளைஞர்களின் தர்பிய்யத்திற்காக வழிகாட்டல் வழங்கினார்கள். அதற்காகவும் நாங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றோம்.

(செய்யது ஷம்ஷாது அஹ்மது நாஸிர், பிரதிநிதி அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் அமெரிக்கா – நன்றி: அல்ஃபஸ்ல் இண்டர்நேஷனல் பத்திரிகை 13 ஏப்ரல் 2021)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி... நியூஸிலாந்து - 2013 சுற்றுப்பயணம்)*

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: காயித் ஸஹத் வ ஜிஸ்மானி (உடல் ஆரோக்கிய செயலர்) அவர்களும் நடைபயணம் தொடர்பான நிகழ்ச்சிகளை வடிவமைக்க முடியும். மேலும் நாயிப் சத்ர் இரண்டாம் பிரிவு அவர்கள் அந்த பணிகளில் உதவி செய்ய முடியும். Charity Walk இருக்கின்றது. அதில் அன்ஸார் சகோதரர்கள் பங்கு பெற முடியும். நியூஸிலாந்தின் தேசிய மஜ்லிஸே ஆமிலா அன்ஸாருல்லாஹ்வின் ஹுஸூர் (அய்யஹுல்லாஹ்) அவர்களுடனான இந்த சந்திப்பு 7:40 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் செயற்குழு உறுப்பினர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கு நற்பேறு பெற்றார்கள்.

### லஜ்னா இமாயில்லாஹ் நியூஸிலாந்தின் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடனான சந்திப்பு

இதன் பிறகு லஜ்னா இமாயில்லாஹ் நியூஸிலாந்தின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுடன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சந்திப்பு ஆரம்பமானது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்தார்கள். துஆவிற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒவ்வொரு செயலரிடமும் அவரது துறை மற்றும் பணி தொடர்பாக விசாரித்தார்கள். மேலும் உரிய வழிகாட்டலை வழங்கினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேள்வி கேட்டபோது தர்பிய்யத் செயலர் தனது பணியின் அறிக்கையை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்: தற்போது நாங்கள் லஜ்னா இமாயில்லாஹ் UK சார்பாக தயாரிக்கப்பட்ட தர்பிய்யத் பாடத்திட்டத்திற்கேற்ப பணி செய்து வருகின்றோம். ஒவ்வொரு மாதமும் தர்பிய்யத் கூட்டங்களை நடத்தி வருகின்றோம். அதில் பல்வேறு தலைப்புகளின் கீழ் விவாதித்து வருகின்றோம். உதாரணமாக தொழுகை, குடும்ப வாழ்கை போன்ற தலைப்புகளில் விவாதித்து வருகின்றோம்.

லஜ்னாவின் ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் அந்த பாடத்திட்டத்தின் பிரதியை அவர் தயாரித்து வருவதாக அந்த தர்பிய்யத் செயலர் கூறினார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள்: லஜ்னா அமைப்பின் உறுப்பினர்களுக்கு தொழுகையை நிலைநாட்டுதல் குறித்தும், திருக்குர்ஆன் தொடர்பாகவும் போதனை வழங்குங்கள். திருக்குர்ஆன் ஓதுவதை கற்க வேண்டும். பின்னர் மொழியாக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு முறையாக நிகழ்ச்சிகளை உருவாக்கி பணி செய்ய வேண்டும். மேலும் MTA பார்ப்பதற்கும், குத்பாக்கள் மற்றும் சொற்பொழிவுகளை கேட்பதன் பக்கமும் கவனமூட்டி வாருங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

தஜ்னீத் செயலரிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் லஜ்னாவின் எண்ணிக்கையை பற்றி கேட்டறிந்தார்கள். அப்போது லஜ்னா உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 141 என்றும், அதே நேரம் நாஸிராத்துகளின் எண்ணிக்கை 42 என்றும் தஜ்னீத் செயலர் கூறினார்.

தப்லீக் செயலர் தமது அறிக்கையை சமர்ப்பித்தவாறு இதுவரை 7 பைஅத்துகள் திருமணத்தின் வடிவில் கிடைத்துள்ளன என்று கூறினார். அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: திருமணத்தை இறைவன் வெற்றி பெறச் செய்வானாக. இந்த புதிய அஹ்மதி பெண்கள் அஹ்மதிய்யத்தில் நிலைநிற்கும் வகையில் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள்.

தப்லீக் செயலர் கூறினார்: ஒவ்வொரு ஆண்டும் லஜ்னா இமாயில்லாஹ் நியூஸிலாந்து சர்வ சமய கருத்தரங்கை நடத்தி வருகின்றது. அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: நிகழ்ச்சிக்கு வருகை தரும் விருந்தினர்கள் அவர்கள் சொற்பொழிவாளர்கள் என்றால் சம்பந்தப்பட்ட தலைப்பில் தத்தமது மார்க்கம் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் நிகழ்த்த வேண்டும். மற்ற மார்க்கங்களைப் பற்றி பேசக் கூடாது.

(தொடரும்... பத்ர் பத்திரிகை உருது – 20 பிப்ரவரி 2014)

### மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

சிலுவையிலிருந்து உயிருடன் இறக்கப்படுகின்றார். நெருப்பிலிருந்து பாதுகாப்பாக வெளியேறி விடுகின்றார். இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொள்கின்ற நபர்களே இந்த அற்புதங்களை காண்கின்றனர்.

சுருக்கமாக, அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் உண்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்த அந்த நெருப்பின் நேரத்தில் வெளிப்பட்டது. சிலரின் கருத்துப்படி வெளியேற்றுவதற்கான எண்ணமே (எதிரிகளுக்கு) இருந்தது. ஆனால் உள்ளபடியே கொலை செய்வதற்கு திட்டம் தீட்டப்பட்டிருந்தது. அதுபோன்ற நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தமது உண்மை மற்றும் நன்றியுணர்விற்கான எப்படிப்பட்ட முன்னுதாரணத்தை வெளிப்படுத்தினார்கள் என்றால் அது உலகம் இருக்கும் வரை நிலைபெற்றிருக்கும். அந்த துன்பத்தின் நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த தேர்ந்தெடுப்பே ஹஸ்ரத் சித்தீக் (ரலி) அவர்களின் மேன்மை மற்றும் உயர் நன்றியுணர்விற்கு ஒரு வலிமையான சான்றாகும்.

பாருங்கள்! இந்தியாவின் வைஸ்ராய் ஒரு நபரை ஒரு குறிப்பிட்ட பணிக்காக தேர்ந்தெடுத்தால் அவரது கருத்து சிறந்ததாகவும், சரியாகவும் இருக்குமா? அல்லது ஒரு காவலாளியின் கருத்து சிறந்ததாக இருக்குமா? வைஸ்ராயின் தேர்ந்தெடுப்பே எல்லா நிலையில் சிறந்ததாகவும், உகந்ததாகவும் இருக்கும் என்று ஒப்புக் கொள்ள நேரிடும். ஏனென்றால் எந்த நிலையில் அவர் அரசாட்சியின் சார்பாக ஆட்சியின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளாரோ அதன் மூலம் அவரின் நன்றியுணர்வு, அகப்பார்வை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றின் மீது அரசர் நம்பிக்கை கொண்டுள்ளார் என்றே பொருள்படும். எனவே தான் ஆட்சியின் கடிவாளத்தை அவரது கையில் வழங்கியுள்ளார். அவ்வாறிருக்க அவரது கருத்து, திட்டம் மற்றும் விவகாரத்தை புரிதல் ஆகியவற்றை புறந்தள்ளி விட்டு ஒரு காவலாளியின் தேர்ந்தெடுப்பையும், கருத்தையும் சரியானதாக புரிந்து கொண்டால் அது ஆகுமற்ற காரியமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 340 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### 126 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள். (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்களிய்யா, காதியான்)

### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்


**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

### முதல் பக்கத்தின் தொடர்ச்சி... ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...

முழுமையடையும். அதற்காக மற்ற நாட்களில் இறைவணக்கத்தை கைவிட்டு விட வேண்டும் என்பது அதன் பொருளல்ல. மாறாக, அதன் பொருள் என்னவென்றால் வழக்கத்தை விட அதிகமாக இறைவணக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் இந்த வசனம் இறங்கிய அந்த நேரத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவணக்கம் செய்து வந்தார்கள். எனவே இந்த வசனத்தின் பொருள் என்பது வழக்கத்தை விட அதிகமான இறைவணக்கமும், கவனமும் மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

யகீன் (நம்பிக்கை) ஏற்படாத வரை இறைவணக்கம் கடமையாகும். யகீன் கிடைத்து விட்டால் பின்னர் இறைவணக்கம் தேவையில்லை. ஏனென்றால் யகீன் கிடைக்கின்ற வரை இறைவணக்கம் செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறுவதாக சில அறிவிலிகள் மற்றும் பித்அத்துகளை பின்பற்றக்கூடியவர்கள் இந்த வசனத்திற்கு பொருள் கொள்கின்றனர். இந்த அறிவிலிகள் இதனை அறிவதில்லை. அதாவது இவ்வாறு அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கின்றார்கள். இந்த அதிகாரம் இறங்கும் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை ஏற்பட்டிருக்கவில்லை என்று ஒரு வகையில் இவர்கள் கூறுகின்றனர் (நவூதுபில்லாஹ்). ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நபித்துவத்திற்கு பிறகும் யகீன் கிடைத்திருக்கவில்லையென்றால் பின்னர் இந்த இழிவான மக்களுக்கு யகீன் எவ்வாறு கிடைக்க முடியும்? نَعُوْذُ بِاللّٰهِ مِنْ هٰذِهِ الْخُرَافَات

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 117 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

ஹுஸூர் (ரலி) கூறுகின்றார்கள்: நான் ஒரு முறை ஜுமுஆ தொழ வைத்து விட்டு வந்தேன். அப்போது ஒரு சூஃபியிஸ சிந்தனை கொண்ட மனிதர் முன்னால் வந்தார். நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன் என்று கூறினார். கேளுங்கள் என்று நான் கூறினேன். ஒரு நபர் நதியில் பயணம் செய்து செய்து கரையை அடைந்து விட்டால் அதன் பிறகு அவர் படகிலேயே அமர்ந்திருக்க வேண்டுமா? அல்லது கீழே இறங்கி விட வேண்டுமா? என்று கேட்டார். அவர் இந்த கேள்வியை கேட்ட உடனேயே அவரது கேள்வியின் நோக்கத்தை அல்லாஹ் எனக்கு புரிய வைத்து விட்டான். உண்மையில் இது சூஃபிகளின் ஒரு ஏமாற்றுதலாகும். பொதுவாக அவர்கள் இந்த சிந்தனையில் மூழ்கி இருக்கின்றனர்.

தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் ஸகாத் போன்றவை பயண சவாரிகளைப் போன்றாகும். இந்த சவாரிகள் நமது அன்பரின் (இறைவனின்) வாசல் வரை கொண்டு சேர்ப்பதற்காக பயன்படுகின்றன என்று அவர்கள் கூறுகின்றனர். ஒரு நபர் தனது நேசரின் வாசல் வரை வந்தடைந்து விட்டு சவாரியிலேயே அமர்ந்து கொண்டிருந்தால் மேலும் கீழே இறங்காவிட்டால் பின்னர் அவர் மிக மோசமான அவமரியாதை செய்பவராக கருதப்படுவார். இதேபோன்று ஒரு நபர் இறைவனின் நெருக்கத்தை பெற்றுக் கொண்டால் பின்னர் அவருக்கு தொழுகை, நோன்பு ஆகியவற்றின் தேவை இருப்பதில்லை. ஏனென்றால் அவர் இறைவனின் வாசலை வந்தடைந்து விட்டார். (இது அவர்களின் கொள்கையாகும்.)

சுருக்கமாக அவர் இந்த கேள்வியை கேட்டபோது உடனடியாக அல்லாஹ் இந்த அனைத்து விஷயங்களையும் எனக்கு தெளிவுபடுத்தி விட்டான். அப்போது நான் அவரிடம் கூறினேன். நதி கரையைக் கொண்டதாக இருந்தால் பின்னர் நிச்சயமாக கரை வந்ததும் அந்த நபர் படகிலிருந்து இறங்கி விட வேண்டும். ஆனால் அந்த நதி எல்லையற்றதென்றால் அதற்கு எந்த கரையும் இல்லையென்றால் பின்னர் அவர் நினைவிற் கொள்ளட்டும். அவர் எந்த இடத்தில் கீழே இறங்குவாரோ அதே இடத்தில் அவர் மூழ்கி விடுவார். தற்போது நீங்கள் கூறுங்கள். எந்த நதியைப் பற்றி தாங்கள் குறிப்பிட்டீர்களோ அது எல்லைக்குட்பட்டதா? அல்லது எல்லையற்றதா? அப்போது அது எல்லையற்றது என்று கூறினார். அப்படியென்றால் எல்லையற்ற நதியில் மனிதன் எந்த இடத்தில் இறங்கினாலும் அதே இடத்தில் மூழ்கி விடுவான். அவர் அந்த படகில் அமர்ந்திருப்பதே அவருக்கு பாதுகாப்பானது என்று நான் கூறினேன்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 7 பக்கம் 186 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:– www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 09 Dec 2021 Issue No. 49

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் (2013)

**01 நவம்பர் 2013 (வெள்ளிக்கிழமை)**

## தேசிய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் நியூஸிலாந்தின் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் சந்திப்பு

இதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நியூஸிலாந்து தேசிய செயற்குழு அன்ஸாருல்லாஹ்வின் சந்திப்பு ஆரம்பமானது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்தார்கள்.

காயித் உமூமியிடம் மஜ்லிஸ்களைப் பற்றி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கேள்வி கேட்டார்கள். காயித் உமூமி அவர்களுக்கு மஜ்லிஸ்களை புரிவதில் கடினம் ஏற்பட்டது. அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அன்ஸாருல்லாஹ்வின் உங்களது விதிகளை படியுங்கள். அப்போது மஜ்லிஸ்கள் என்றால் என்ன? மஜ்லிஸ்கள் என்பதன் பொருள் என்ன? என்பது உங்களுக்குத் தெரிய வரும். மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்களது சட்ட திட்டங்களை படிக்க வேண்டும். தத்தமது துறையில் என்னென்ன பணிகள் உள்ளன? என்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். பின்னர் அதற்கேற்ப ஒவ்வொரு காயிதும் (துறைச் செயலரும்) தனது நிகழ்ச்சியையும், செயல் திட்டத்தையும் உருவாக்க வேண்டும்.

காயித் தஃலீம் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஒன்றைக் குறித்து கேட்டபோது இவ்வாறு கூறினார். நாங்கள் எங்களது பாடத்திட்டத்திலும், மார்க்க தேர்விலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகமான நிஷானே ஆஸ்மானி என்ற நூலை வைத்துள்ளோம். அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அன்ஸாருல்லாஹ் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அதனை படித்து விட்டார்களா? ஏனைய அன்ஸார்கள் அனைவரும் அதை படித்து விட்டார்களா? என்று கேட்டார்கள். மேலும் நீங்கள் மொத்தம் 72 அன்ஸார்கள் உள்ளீர்கள். முறையாக ஆய்வு செய்து வாருங்கள். யார் படித்து விட்டார்? யார் படிக்கவில்லை? என்பதை Follow Up செய்து வாருங்கள். யார் படிக்கவில்லையோ அவருக்கு கவனமூட்டுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) வழிகாட்டல் வழங்கினார்கள்.

காயித் மால் அவர்கள் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு கூறினார்: மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் உறுப்பினர்களில் சம்பாதிக்கக்கூடிய நாஸிர்களின் எண்ணிக்கை 27 ஆகும். எவர்கள் சம்பாதிக்கவில்லையோ அவர்களிலும் சிலர் தகுதிக்கேற்ப சந்தா கொடுக்கின்றனர். சிலர் சந்தா கொடுப்பதில்லை. சரி! அவர்களுக்கு கவனமூட்டி வாருங்கள் என்று அப்போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

காயித் தர்பிய்யத் நவ் முபாயீன் (புது அஹ்மதிகளுக்கான தர்பிய்யத் செயலர்) இவ்வாறு கூறினார்: தற்போது ஒரு புதிய அஹ்மதி நாஸிர் தர்பிய்யத்தின் கீழ் இருக்கின்றார். காயித் தர்பிய்யத் புதிய அஹ்மதிக்கான காலகட்டத்தைப் பற்றி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் எவ்வளவு காலம் வரை ஒருவர் புதிய அஹ்மதியாக இருக்கின்றார்? என்று கேட்டார். அப்போது மூன்று ஆண்டு வரை இருக்கின்றார். அதன் பிறகு அவர் ஜமாஅத் அமைப்பின் முறையாக அங்கமாக ஆகி விட வேண்டும். பின்னர் அவர் புதிய அஹ்மதியாக இருப்பதில்லை என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

காயித் ஈஸார் (சேவைத்துறை செயலர்) அவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்: முறையாக திட்டத்துடன் மருத்துவமனைக்கு அன்ஸார் சகோதரர்கள் சென்று வர வேண்டும். மேலும் முதியோர் இல்லத்திற்கும் செல்ல வேண்டும். நோயாளிகள் மற்றும் முதியோர்களை சந்திக்க வேண்டும். அவர்களை நலம் விசாரியுங்கள். மேலும் தொடர்புகளை உருவாக்கியவாறு பழங்கள் போன்றவற்றை எடுத்துச் செல்லுங்கள். இவ்வாறு நட்பை உருவாக்குங்கள். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக இந்த விஷயம் ஜமாஅத்தின் அறிமுகத்திற்கும், தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கும் காரணியாக அமையும்.

காயித் தஃலீமுல் குர்ஆன் மற்றும் வக்ஃபே ஆர்ஸி அவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு வழிகாட்டினார்கள்: முதலில் நீங்கள் உங்களது சட்ட விதிகளை படியுங்கள். 72 நபர்களுக்கும் திருக்குர்ஆன் ஓத தெரிந்திருக்க வேண்டும். அதை ஆய்வு செய்யுங்கள். பின்னர் திருக்குர்ஆன் ஓதத் தெரியாதவர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள். இரண்டாவதாக, அன்ஸார் சகோதரர்கள் வக்ஃபே ஆர்ஸி செய்வதற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்குங்கள். எந்த அன்ஸார் சகோதரர்களுக்கு திருக்குர்ஆன் ஓதத் தெரியுமோ அவர் வக்ஃபே ஆர்ஸி செய்ய வேண்டும். மற்ற நேரங்களில் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் மார்க்க வகுப்புகள் நடத்த வேண்டும். மேலும் அவர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும். தப்லீக் செய்ய வேண்டும். தொடர்புகளை உருவாக்க வேண்டும். இந்த பணிகளையும் அவர்களிடம் ஒப்படையுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் எங்களது பைஅத்தின் எண்ணிக்கை சுமார் 10, 12 ஆகும் என்று காயித் தப்லீக் கூறினார். அப்போது தப்லீக் நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். உங்களது பழைய வழிமுறையிலான நிகழ்ச்சிகளை விட்டு விடுங்கள். தப்லீக்கிற்காக புதிய வழிகளை தேடுங்கள். சிறிய டவுண்கள், கிராமங்கள் போன்ற இடங்களுக்கு செல்லுங்கள். தொடர்புகளை உருவாக்குங்கள். பிரசுரங்களை விநியோகிங்கள். இவ்வாறு திட்டம் வகுத்து செயல்படுங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

காயித் வக்ஃபே ஜதீத் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அன்ஸார் சகோதரர்களும் வக்ஃபே ஜதீத் சந்தாவிற்காக தமக்கென ஒரு இலக்கை வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் அதனை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆடிட்டரிடம் கணக்கு வழக்குகளை பார்ப்பதும், கணக்குகளை ஆய்வு செய்து வருவதும் உங்களின் பொறுப்பாகும் என்று கூறினார்கள்.

காயித் இஷாஅத்திடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், நீங்கள் பத்திரிகை ஏதாவது வெளியிடுகின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் அன்ஸாருத்தீன் என்ற பத்திரிகையை வெளியிடுகின்றோம் என்று அவர் கூறினார். அதனைப் படிப்பதற்கு அனைத்து அன்ஸார் சகோதரர்களுக்கும் நினைவூட்டி வாருங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எத்தனை நபர்கள் MTA பார்க்கின்றார்கள்? மேலும் எனது குத்பாக்களையும் பார்ப்பவர்கள் எத்தனை நபர்கள் என்று கேட்டார்கள். Facts & Figures புள்ளி விவரங்களுடன் பதில் வழங்குங்கள் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு அன்ஸார் சகோதரர்களும் ஆகூஹ பார்க்க வேண்டும். குத்பாக்கள் கேட்க வேண்டும். இதை முறையாக ஆய்வு செய்ய வேண்டும். பலவீனமாக இருப்பவருக்கு கவனமூட்ட வேண்டும் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

காயித் தஹ்ரீகே ஜதீத் தனது அறிக்கையை சமர்ப்பித்தவாறு இவ்வாறு கூறினார்: 72 அன்ஸார் சகோதரர்களில் 63 உறுப்பினர்கள் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுக்கின்றார்கள். 4300 டாலர்கள் எங்களது சந்தா இலக்காக இருந்தது. அதில் 98 சதவிகிதம் நாங்கள் வசூல் செய்து விட்டோம். மீதமுள்ள தொகையையும் விரைவில் வசூல் செய்து விடுவோம்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நாயிப் சதர் அன்ஸாருல்லாஹ் அவர்களிடம் கூறினார்கள்: அன்ஸார் சகோதரர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். சைக்கிளிங், மாராத்தான் ஓட்டம் மேலும் இதர அன்றாட நடைபயணம் போன்ற நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள்.

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad